பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 12 வியாழக்கிழமை (24.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 150

## கிளாலி, முகமாலை, கண்டல் பகுதிகளில்

# படையினர் - புலிகள் 10½ மணி நேரம் நேற்று உக்கிரச் சமர்!

கொழும்பு, ஏப்ரல்24

கிளாலி, முகமாலை மற்றும் கண்டல் பகுதிகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று - தொடர்ச்சியாக - பத்தரை மணி நேரமாக - இடைவிடாது உக்கிரச் சமர் நடைபெற்றது.

நேற்று அதிகாலை 2.30 மணிக்குத் தொடங்கிய கடுஞ்சமர் தொடர்ந்து நண்பகல் ஒரு மணிக்கே ஓய்ந்ததாக களமுனைச் செய்திகள் தெரிவித்தன.

அந்தக் கடும் சமரில் இரண்டு பகுதியினருக்கும் இழப்புக்கள் ஏற்பட்ட போதிலும் பரஸ்பரம் வெவ்வேறு எண்ணிக்கைகளைத் தெரிவித்துள்ளனர்.

இராணுவத் தரப்பில் 100 பேர் கொலையுண்டதாகப் புலிகள் தெரிவித்தனர். ஆனால் தமது தரப்பில் 38 சிப்பாய்களே பலியானதாக இராணுவத் தரப்புக் கூறியது.

புலிகள் தரப்பில் 52 பேர் பலியானதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தமது தரப்பில் 16 பேர் வீரச்சாவடைந்ததாக புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

இதற்கிடையில் 20 சிப்பாய்களின் சடலங்களை மீட்டுள்ளதாகவும் அவற்றை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் படையினரிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் நேற்று மாலை புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

கிளாலி முதல் முகமாலை ஊடாக கிழக்கே

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சுக்களினால் தென்மராட்சி அதிர்ந்தது

யாழ்ப்பாணம், ஏப்.24

தென்மராட்சிப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றுப் பிற்பகல் வரை ஷெல்கள் தொடர்ந்து வீழ்ந்து வெடித்த வண்ணம் இருந்தன. இதனால் அப்பகுதி எங்கும் பெரும் பதற்றம் நிலவியது.

வடபோர் முனையில் முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்று முன்தினம் முதல் செறிவான ஷெல் வீச்சுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முன்னரங்குகள் கைப்பற்றப்பட்டன அவர்களில் 52 இற்கும் மேற்பட்டோர் பலி!

கொழும்பு,ஏப்.24



நேற்றுமுன்தினம் இரவில் இருந்து விடுதலைப் புலிகள் படையினரின் முன்னரங்க நிலைகள் மீது தாக்குதல் நடத்திவந்தனர். அத்தாக்குதலை முறியடித்து படையினர் முன்னேறினர். - என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார சொன்னார்.

விடுதலைப் புலிகளின் முன்னரங்குகளைக் கைப்பற்றிய படையினர் அவற்றை பலப்படுத்தி வருகின்றனர்.

நேற்றுக்காலை படையினர் முன்னேறிச் சென்று விடுதலைப் புலிகளின் முன்னரங்கைக் கைப்பற்றி அவர்களை அவர்களது இரண்டாவது முன்னரங்க நிலைகளுக்கு பின்வாங்கச் செய்தனர் என்றும் பிரிகேடியர் மேலும் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் கைவிட்ட மிகப் பெருந்தொகை போர்க் கலங்களை நாம் கைப்பற்றியுள்ளோம்

### சமரில் 100 இற்கும் அதிக சிப்பாய்கள் பலி

கிளிநொச்சி,ஏப்.24



தமிழர் பிரதேசங்களை வல்வளைப்புச் செய்யும் நோக்குடன் முகமாலை, கிளாலி, கண்டல் பகுதிகளில் இராணுவத்தினர் மேற்கொண்ட முன்நகர்வு படை நடவடிக்கை கடும் சமர் நடத்தி முறியடிக்கப்பட்டது.

மிகுந்த உக்கிரத்துடன் நடத்தப்பட்ட எதிர்த்தாக்குதலில் இராணுவத் தரப்பினர் கைவிட்டுச் சென்ற பெரும் எண்ணிக்கையான போர்க்கலங்களை நாம் கைப்பற்றி உள்ளோம்.

நேற்றைய இடைவிடாச் சமரில் 100

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் உடனடியாக அமைதிப் பேச்சு நடைபெறுவதற்கும் தீர்வை உருவாக்கவும் மத்திய அரசு அழுத்தம் கொடுக்கவேண்டும்

### தமிழக சட்டசபையில் தீர்மானம்

சென்னை, ஏப்.24

இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்காக, மோதலில் ஈடுபட்டு வரும் இரு தரப்புகளுக்குமிடையில் உடனடி அமைதிப் பேச்சுக்களை ஏற்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், முறையான அரசியல் தீர்வு எட்டப்பட இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி தமிழக சட்டசபையில் நேற்று சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தமிழகச் சட்டசபையில் நேற்று கேள்வி நேரம் முடிந்ததும் இலங்கைப் பிரச்சினை குறித்து சிறப்பு கவன ஈர்ப்புப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. காங்கிரஸ் உறுப்பினர் சுதர்சனம், பாட்டாளி மக்கள் கட்சியின் ஜி.கே.மணி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கண்ணப்பன் ஆகியோர் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக, தீர்மானத்தின் மீதான விவாதம்

(12ஆம் பக்கம் பார்க்க)



வியாபாரிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் விசேட விலைக்கழிவு

பாடசாலை அப்பியாசப் புத்தகங்கள், எழுது கருவிகள், பேப்பர் வகைகள் உட்படப் பல பொருள்கள்

யாழ். மொத்த விலையில் 20% - 30% வீதக் கழிவு விலையில் (கொழும்பு விலையில்) பெற்றுக்கொள்ளலாம்.

"போல்கோ" 3, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

முழுமையாக விற்றுத் தீர்த்தல்! உடன் விரையுங்கள்....!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
THE SUDAR OLI
மார்ச் 30 - ஏப் 05
பல அரசியல் கட்டுரைகளுடனும் வழமையான சுவையான அம்சங்களுடனும் இன்று விற்பனையில்.
உங்கள் உதயன் விநியோகஸ்தர்களிடம் கேட்டுவாங்குங்கள்!

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
978 நீலம்
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம்
01 21 45 53
22-04-2008
செல்லுபடியாகும் தொடர் இல. 4752975 - 4770298
ஜக்பொட் பரிசு ரூபா.1,384,450/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 379,307 | 10/- | 3,793,070/- |
| 2 இலக்கங்கள் | 34,796 | 20/- | 695,920/- |
| 1 இல. + லக்கினம் | 34,487 | 30/- | 1,034,610/- |
| 2 இல. + லக்கினம் | 3,14 | 100/- | 314,000/- |
| 3 இலக்கங்கள் | 91 | 500/- | 459,500/- |
| 3 இல. + லக்கினம் | 79 | 5,000/- | 395,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,384,450/- | - |
| மொத்தம் | | | 7,092,100/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 452,737 | | 8,115,600/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,231,150/-

தொடர் இல. 5650625 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 ஏப்ரல் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 4756132-5-29 |
| கொழும்பு | 4766084-5-16 |
| கொழும்பு | 4756118-4-70 |
| நுவரெலியா | 4756924-3-03 |
| மொனராகலை | 4760600-8-45 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, [illegible] வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

# தந்தை செல்வாவின் நினைவு நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

தந்தை செல்வாவின் 31ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற வுள்ளன.

யாழ்.கோட்டையில் தந்தையின் சிலை அமைந்துள்ள சதுக்கத்தில் காலை 9.30 மணிக்கு மலரஞ்சலி நிகழ்வும் பிற்பகல் 3 மணிக்கு பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நினைவுப் பேருரையும நடை பெற ஏற்பாடாகியுள்ளது.

இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் 'விடிவை நோக்கி' என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் தலைவர் ஆயர் அருட்திரு. கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற் புரையை பேராசிரியர் ச.சத்தியசீலனும் அறிமுகவுரையை கலாநிதி க.குணராசா வும் நிகழ்த்துவர். (அ-1)

# உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் நாளை ஒப்படைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப்.24

எச்.என்.டி.ஏ. 1ம் வருட பகல், மாலை நேர மாணவர்களுக்கு நாளை வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு வியாபாரக்கணி தப்பாடப் ஒப்படைப் பரீட்சை நடை பெறும். சகல மாணவர்களும் தவ றாது பரீட்சையில் பங்குகொள்ளுமாறு உயர் தொழில்நுட்பவியல் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (1)

# உடுவில் பிரதேசத்தில் உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

உடுவில் பிரதேசத்துக்குட்பட்ட சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளில் தெரிவு செய்யப்பட்ட சில பயனாளிகளுக்கு சுன் னாகம் ப.நோ.கூ.சங்க கிளைகள் மூலம் இன்று முதல் மூன்று தினங்கள் உலர் உண வுப பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தி னால் வழங்கப்பட்டுள்ள பொருள்கள் இல வசமாக மக்களுக்கு விநியோகிக்கப்பட விருக்கின்றன.

கிளை இல. 7இல் - ஜே/185 முதல் ஜே/187 வரையுள்ள பிரிவுகளுக்கும் -

கிளை இல. 12 இல் - ஜே/188 முதல் ஜே/191 வரையுள்ள பிரிவுகளுக்கும் -

கிளை இல. 11 இல் - ஜே/192 முதல் ஜே/194 வரையுள்ள பிரிவுகளுக்கும் -

கிளை இல. 25 இல் - ஜே/201 முதல் ஜே/202 வரையுள்ள பிரிவுகளுக்கும், 203, 206 பிரிவுகளுக்கும் -

கிளை இல. 20 இல் - ஜே/204, 205, 210, 211 ஆகிய பிரிவுகளுக்கும் -

கிளை இல. 19 இல் - ஜே/207, 208, 209 பிரிவுகளும் - விநியோகம் இடம் பெறும் என்று பிரதேச செயலர் செல்வி ரி.மஞ்சுளாதேவி தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்டவர்கள் பட்டியலை கிளைகளில் பார்வையிடலாம் என்றும், ஏனையோருக்கு அடுத்து வரும் கட்டங்க ளில் விநியோகம் மேற்கொள்ளப்படும் என் றும் அவர் தெரிவித்தார். (1)

# மரண அறிவித்தல்கள்

## பிலோமினா பெனடிக்ற்



(ஓய்வுபெற்ற ஆசிரியை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 10A, கதீற்றல் வீதியில் வசித்த வரும் தற்பொழுது கொழும்பு 143/4/12, மெசஞ்சர் வீதியில் வசித்தவருமான பிலோ மினா (பபாக் குஞ்சு) 22.04.2008 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான எம்.ஏ.இராசையா லூட்ஸ் தம்பதிகளின் மகளும், நீற்றா சேவியரின் (பேபி) அன்புச் சகோ தரியும், குயின்ரஸ் பெனடிக்ற் (ஓய்வுபெற்ற ஆசிரியர், புனித பத் திரிசியார் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், ஒக்ரோ வின் (லெசத்தோ) பாசமிகு தாயாரும், பசில் (அமெரிக்கா), Dr. றோகினி (லெசத்தோ) ஆகியோரின் சிறிய தாயாரும், Rev. Dr.C.Y.நைற் (லெசத்தோ) அவர்களின் அன்ரியும், கிறிஸ்ரி மரி னோவின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (24.04.2008) பி.ப. 3 மணிக்கு கனத்தை சேமக்காலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக் கொள்ளவும்.

தொ.பே:- 078 6070695, 021 222 5687, 021 222 5576.

தகவல்: சகோதரி நீற்றா சேவியர் (பேபி) (73479)

## யோசப் சூசை அன்ரனி



(யூட் போட்டோ உரிமையாளர்)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், குருநகரை வதிவிடமாகவும் கொண்ட யோசப் சூசை அன்ரனி 18.04.2008 வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற யோசப் பெர் னாண்டோ - டெல்வின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யோசப் பீற்றர் - ரெஜினா தம்பதியரின் அன்பு மருமகனும், மெடோனாவின் பாசமிகு கணவரும், யூட்லி யோன் (3ஆம் வருட வர்த்தக பீட மாணவன், யாழ். பல்கலைக் கழகம்), யோசப் வின்சன் (Sun flower colour lab ஊழியர், திரு கோணமலை), ஜெரி ஜோண்சன் (மாணவன், யாழ். புனித பத்திரி சியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.04.2008) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல் லப்பட்டு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக் கொள்ளவும்.

15, அடப்பன் வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

தகவல்: மனைவி, பிள்ளைகள் (73481)

## சுப்பிரமணியம் சோதிலிங்கம்

(நயினாதீவு)

(உரிமையாளர், அன்னபூரணி விலாஸ் - நயினாதீவு, உறுப்பினர், அமுதசுரபி அன்னதான சபை)

நயினாதீவு, 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சோதிலிங்கம் (22.04. 2008) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (தமோதரம் பிள்ளை)-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாசிலாமணி - அன்னம்மா, வாலாம்பிகை தம்பதியினரின் மரு மகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், நித்தியகலா, சுசி கலா, ஸ்ரீகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானேஸ்வரன், கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சாதுரியனின் அன்புப் பேரனும், இராசலிங்கம், நடேசலிங்கம், மகேஸ்வரலிங் கம், உதயபாரதிலிங்கம், தவகுகதாசலிங்கம் ஆகியோரின் அன் புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

43/3, பலாலி.வீதி, திருநெல்வேலி.

தகவல்: திருமதி நா.உதயபாரதிலிங்கம் (மைத்துனி) (73477)

## கந்தையா மகாதேவன்



2ஆம் வட்டாரம், சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் 84/6, தபாற்கந்தோர் லேன், வண்ணார்பண் ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந் தையா மகாதேவன் (21.04.2008) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான கந்தையா - தெய் வானைப்பிள்ளை தம்பதியினரின் மகனும், அமரர் விஜயரத் தினம் - மகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், கலாநிதியின் அன்புக் கணவரும், ரதீபன் (East London University, London), ரஜீவன் (East London University, London), யசோநிதி, மதுரா (மாணவி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர்களான நாகேஸ்வரி (ராதா), பத்மாவதி(லீலா) மற்றும் இரகுநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், நித்தியானந்தன் (ஜேர்மனி), ஸ்ரீரங்கன் (ஜேர்மனி), அமரர் இரவிச்சந்திரன், ஜெயானந்தன் (வர்த்தகர்), கருணானந்தன் (சுவிஸ்), விஜியேந்திரி ஆகியோரின் மைத்துனரும், கலை வாணி, தர்மலெட்சுமி, சுகந்தினி, குமுதினி, சிவாஜினி, விக் னேஸ்வரி, தர்மராஜா (நெடுந்தீவு) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2008) வியா ழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

84/6, தபாற்கந்தோர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

தகவல்: மனைவி, பிள்ளைகள். (73474)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வப்பிரகாசம் இராசமணி

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த திருமதி செல்வப்பிரகாசம் இராசமணி நேற்று(23.04.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வப்பிரகாசத்தின் அன்பு மனை வியும் தவச்செல்வம்(அஞ்சலகம், உரும்பிராய்), குலச்செல்வம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), செல்வமலர்(நோர்வே) ஆகியோ ரின் அன்புத் தாயாரும் இராசமணி, ஸ்ரீஜெனனா, சுந்தரராஜ் (நோர்வே) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2008) வியாழக் கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

தகவல்: செ.தவச்செல்வம் (A)

# மரண அறிவித்தல்



## Dr. வயிரமுத்து பூபாலசுந்தரம்

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிட மாகவும் கொண்ட Dr.வயிரமுத்து பூபாலசுந்தரம் 21.04.2008 திங் கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரமுத்து - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிராசா - செல்லம்மாவின் அன்பு மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் மகாலிங்கம், நவ ரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாக்கியம், இராஜலட் சுமி ஆகியோரின் மைத்துனரும் பவானி, சுகந்தி, சுரேஷ்குமார், ரமேஷ்குமார், பிரகாஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேஸ் வரராஜா, ரவீந்திரன், கிருத்திகா, இந்துமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் கிரிஷிகன் டினுஷா, விரோஷனன், கம்சா, துனிசன், அருசிகன், நிதிசன் ஆகியோரின் அன் புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.04.2008) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிவரை அஞ்சலிக்காக ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு கனத்தை (Borella) இந்து மயானத்தில் தகனம் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி, உரும்பிராய்.

தகவல்: மனைவி, பிள்ளைகள். (B)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்செயல் புரிபவர்களைக் கண்டுபிடிப்பதற்கு பொலிஸாருக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு அவசியம்

## பருத்தித்துறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஏப்.24

கிராமப் பகுதிகளில் பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன. இக் குற்றச் செயல்களைப் புரிபவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பது பொலிஸாரின் கடமையாகும். இதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பே மிக முக்கியமானது.

மேற்கண்டவாறு பருத்தித்துறை அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் பத்தித்துறைப் பொலிஸாரால் நடத்தப்பட்ட ''நடமாடும் செயலகசேவை''யை ஆரம்பித்து வைத்த பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர்.பீ.எஸ். பண்டார குறிப்பிட்டார்.

இந்த நடமாடும் செயலக சேவை உதவிப் பொலிஸ்அத்தியட்சகர் ஜே.எச்.கே. லியனகேயின் கண்காணிப்பில் நடைபெற்றது.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண்டார குறிப்பிட்டதாவது;

''சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்திப் பொதுமக்களைப் பாதுகாப்பதே பொலிஸாரின் கடமை. பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பொலிஸார் பொதுமக்களிடம் வந்து நடமாடும் செயலக சேவைகளை நடத்துகின்றனர். இந்த நடமாடும் செயலக சேவையில் பொதுமக்கள் தங்களது சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.''

பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துஅவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். பொதுமக்களுக்காகவே செயற்பட்டுவரும் பொலிஸாருக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பொதுமக்கள் வழங்கும் தகவல்களையடுத்தே பொலிஸார் குற்றவாளிகளைக் கைதுசெய்து அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி அவர்களின் குற்றச் செயல்களுக்கான தண்டனைகள் வழங்கப்படுகின்றன.

பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் நல்லுறவு நிலவும்போது குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ள முடியாது. குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். நிரபராதிகள் தண்டிக்கப்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

பொலிஸாரைக் கண்டு அச்சம் கொள்ளத் தேவையில்லை. பொலிஸார் உங்களுக்கு உதவுவதற்காகவே உங்கள் முன் வருகின்றனர். இன்றும் இக் கிராமத்தில் பொதுமக்களுக்கு உதவுவதற்காகவே இந்த நடமாடும் செயலக வேவைகளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர். லியனகே ஒழுங்கு செய்துள்ளார். பொது மக்கள் இந் நடமாடும் செயலக சேவையின் முழுப் பயனையும் பெற்றுக் கொள்ளவேண்டும். சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டிப் பொதுமக்களைப் பாதுகாக்கப் பொலிஸார் எப்போதும் ஆயத்தமாகவே உள்ளனர் - என்றார்.

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற நடமாடும் செயலக சேவையை வல்வெட்டித்துறைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. சுமித் நிஸங்கவும், நெல்லியடிப்பொலிஸ் பிரிவில் கலிகைக் கந்தன் ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நடமாடும் செயலக சேவையை நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி எச்.எம்.ஜே.ஹேரத்தும்ஆரம்பித்து வைத்தனர்.

இந் நடமாடும்செயலக சேவையில் பொலிஸ் விடுகைப் பத்திரம் வழங்கல், சிறு பிரச்சினைகள் தீர்த்து வைத்தல், பொலிஸ் முறைப்பாட்டுப்பிரதிகள்வழங்கல், அடையாள அட்டைபெறுதல் சம்பந்தமான நடவடிக்கைகள், கல்யாணப் பதிவின்றி குடும்பம் நடத்தும் குடும்பத்தினர்களுக்கு கல்யாணப் பதிவு மேற்கொள்ளல் என்பன இடம் பெற்றன. (202)



எச்.என்.பி.அசுரன்ஸின் 2007 இறுதியாண்டு விற்பனை மேம்படுத்தல் நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்திய கலாநிதி எஸ்.பவானி மங்களவிளக்கினை ஏற்றுவதை முதலாவது படத்திலும், வெளிக்கள முகாமையாளர் அலன் கியூமர் உரையற்றுவதையும் பரிசில்களைப் பிராந்திய முகாமையாளர் எஸ்.எம்.புவிராஜ் வழங்குவதையும் அடுத்த இரண்டு படங்களிலும் நிகழ்விற்கு வருகை தந்திருந்தவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (203)

# காக்கைதீவு சேதன பசளை உற்பத்தி நிலையத்தை புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட காக்கை தீவு சேதன பசளை உற்பத்தி நிலையம் மீள புனரமைக்கப்படவுள்ளது.

மாநகர ஆணையாளர் மு.செ.சரவண பவ மீள்புனரமைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

கடந்த காலங்களில் மாநகர சபையூடாகக் காக்கைதீவு சேதன பசளை உற்பத்தி நிலையத்தில் பசளை உற்பத்தி செய்யப்பட்டு குடாநாட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. இதன்மூலம் சபையும் வருமானத்தைப் பெற்றது. கடந்த 16 மாதங்களாக அபிவிருத்தியின்றி இருந்த காக்கை தீவு சேதன பசளை உற்பத்தி நிலையம் மீளப் புனரமைக்கப்பட்டு அதற்குப் பொறுப்பான அலுவலர்களும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (202-95)

# தீவக வலயத்தில் பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களுக்கு எழுத்தறிவூட்டல் வகுப்புகள்

வேலணை,ஏப்.24

தீவகக் கல்வி வலயத்தில் பாடசாலையைவிட்டு இடைவிலகிய மாணவர்களின் நன்மை கருதி எழுத்தறிவூட்டல் வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

யுனிசெப் நிறுவனமும் தீவகக் கல்வி வலயமும் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் மூலம் 31 மாணவர்கள் இனங்காணப்பட்டு வகுப்புகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், வேலணை கிழக்கு ம.வி. நாரந்தனை றோ.க.வித்தியாலயம், நெடுந்தீவு சக்கிரியான் பள்ளம் அ.த.க.பாடசாலை, காரை சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இவ்வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

5 மாதங்கள் தொடர்ந்து வகுப்புகள் நடத்தப்படும் மாணவர்கள் உரிய தகுதி பெற்றபின் அவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனத் தீவக வலயக் கல்வி வட்டாரங்கள் தெரிவித்தன. (202-267)

## வலி .தென்மேற்குப் பிரதேச

# மாற்றுப் பயிர்ச் செய்கை உற்பத்திக்கு நான்கு தொண்டு நிறுவனங்கள் உதவி

யாழ்ப்பாணம்,ஏப்.24

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மாற்றுப் பயிர்ச் செய்கை உற்பத்தியை மேம்படுத்துவதற்குநான்கு தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் உதவி வருகின்றன.

இத்தகவலை பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரதேசத்தில் விவசாய உற்பத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உணவு விவசாய நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கெயர், கரித்தாஸ் போன்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்கி வருகின்றன.

விவசாய உற்பத்தி அதிகரிப்பதற்கு ஏற்ப விதையினங்களை வழங்கி வேலைத் திட்டங்களை மேற்கொண்டு கூடுதல் பங்களிப்பினை மேற்கொண்டு வருகின்றன எனப் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (202-95)

# பொங்கல் விழா

வலி.வடக்கு,ஏப்.24

ஏழாலைப் பெரியதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா இன்று முதல், நண்பகல் வரை இடம்பெறவுள்ளது.

இதற்கென 770 ஆம் இலக்க வழிப் பாதையான குப்பிளான் வீதியில் தனியார் மினிபஸ் சங்கத்தினர் காலை 7 மணிமுதல் நண்பகல் 2 மணிவரை விசேட மினிபஸ் சேவையை தெல்லிப்பழை - யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்து மேற்கொள்ளவுள்ளார்கள். (202-86)

# ஆனைக்கோட்டை மீன்சந்தை இடமாற்றம்

நவாலி,ஏப்.24

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலயத்திற்குச் செல்லும் வீதியில் இயங்கி வந்த மாலை நேர மீன்சந்தை தற்பொழுது சாவற்கட்டிற்குச் செல்லும் வீதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கரைப்பிரான் ஆலயத்தில் தற்போது வருடாந்தப் பெருந்திருவிழா இடம்பெற்று வருவதைத் தொடர்ந்து இவ்வாறு மாற்றுச் செயற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வீதியின் அருகேயுள்ள வெள்ளம் ஓடும் பாரிய வாய்க்காலில் பொதுமக்கள் உரப்பைகளில் கழிவுப் பொருள்கள் எடுத்துவந்து வீசி விட்டு செல்வதால் அவை துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படும் அபாயமும் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களின் நன்மை தகுதி இவற்றைத் துப்புரவு செய்ய முன்வர வேண்டும்மென்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (202-100)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் நிலக்கடலைச் செய்கையில் ஆர்வம்

## பிரதி விவசாயப் பணிப்பாளர் தகவல்

நல்லூர்,ஏப்.24

யாழ்.மாவட்டத்தில் நிலக்கடலைப் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வத்துடன் உள்ளனர். 2007, 2008 கால போகத்தில் 125.75 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது என யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் நிலக்கடலை பயிர் செய்கை தற்சமயம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இந்த அதிகரிப்பு விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

2003 முதல் 2006 வரையான கால போகத்தில் 11.25 ஹெக்டேர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட நிலக்கடலைப் பயிர் கடந்த 2007, 2008 இற்கான காலபோகத்தில் 125.75/ஹெக்டேர் நிலப் பரப்பாக அதிகரித்துள்ளது.

2005 இல் சிறுபோகத்தின் போது 9 ஹெக்டயரில் செய்கை பண்ணப்பட்ட இப்பயிர் 2007 சிறுபோகத்தில் 44.55 ஹெக்டயரில் உற்பத்தி பண்ணப்பட்டது.

பாரம்பரியமாக காசுப் பயிராகச் செய்கை பண்ணப்பட்ட வெங்காயம், புகையிலைப் பயிர்களுக்குமாற்றீடாகநிலக்கடலைச்செய்கை மாறியுள்ளது எனவும் பிரதி விவசாய பணிப்பாளர் குறிப்பிட்டார். (202-111)

## தென்மராட்சிப் பிரதேசத்தில்

# கசிப்பு உற்பத்திக்கென கோடா வைத்திருந்த நால்வருக்கு 6 லட்சத்து 20 ஆயிரம் ரூ. அபராதம்!

யாழ்ப்பாணம்,ஏப்.24

தென்மராட்சிப் பிரதேசத்தில் சட்ட விரோதமாகக் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருந்த சகோதரர்கள் இருவர் உட்பட நால்வருக்கு ஆறு லட்சத்து 20 ஆயிரம் ரூபா சாவகச்சேரி நீதிமன்றினால் அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரி திணைக்கள உத்தியோகத்தர்கள் அண்மையில் கொடிகாமம் வடக்கு, மீசாலை மேற்கு, கெருடாவில் ஆகிய இடங்களில் நடத்திய பரிசோதனையின் போது கசிப்பு குகைகளைக் கண்டுபிடித்து அவற்றினை நடத்திய சகோதரர்கள் இருவர் உட்பட ஐவர் மீது சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ் வழக்குகள் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குற்றத்தினை ஒப்புக் கொண்ட நால்வருக்கு மேற்படி அபராதம் விதிக்கப்பட்டு அபராதத் தொகை செலுத்தத் தவறின் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

மீசாலை மேற்கு, கெருடாவில் கொட்டாம் பிட்டி என்னும் இடத்தில் கசிப்புக் குகை நடத்திய செல்வரத்தினம் தனராஜ், செல்வரத்தினம் விமலராஜ் ஆகிய இருவரும் தலா 70 லீற்றர் சட்ட விரோத கோடா வைத்திருந்தமைக்காக தலா 1 லட்சத்து 70 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 20 மாதம் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் -

கொடிகாமம் வடக்கு, எழுவன் பகுதியில் 67 லீற்றர் சட்டவிரோத கோடா வைத்திருந்த ஜேசுதாசன் அன்ரனிதாஸ் என்பவருக்கு ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 20 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் -

இதே இடத்தைச் சேர்ந்த வெள்ளி சசிகுமார் என்பவர் 40 லீற்றர் கோடா வைத்திருந்தமைக்காக ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா அபராம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 18 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் - உத்தரவிட்டார். (202-207)

# திரைப்படக் காட்சி

யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் கல்விசார்/கலைத்துவம் சார் படக்காட்சித் தொடரில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சர்வதேச புகழ்பெற்ற திரைப்பட நெறியாளரும் பெண்ணியல்வாதியுமான தீபா மேத்தாவின் 'வோட்டர்' (Water) திரைப்படம் வீடியோ காட்சியாக அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. இது இளவயது விதவைகளின் சோகவாழ்வைச் சித்தரிக்கும் திரைப்படமாகும்.

திரைப்படக் காட்சின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரும் வருகைதந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்தார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்டிமீடியா பயிற்சிநெறிகள்



ஒவ்வொரு வாரமும்
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

**Advanced Diploma in Digital Pre-Press**
Adobe Pagemaker 7.0, Corel draw X4, Adobe Photoshop CS3, Language Computing, Equation Editor & Project

**Diploma in Video Production**
Introduction to Digital Video, Morph, Adobe Premiere, Sound Forge, Combustion & Project



பாடநெறிகளுக்கான சான்றிதழ்கள் யாவும் CSC இந்திய உயர்கல்வி நிறுவனத்தால் வழங்கப்படுகிறது.
மேலதிக விபரங்களுக்கு....

**CSC COMPUTER EDUCATION**
101,2ம் மாடி ஸ்ரான்லி வீதி,(மக்கள் வங்கிக்கு மேலாக)
யாழ்ப்பாணம், Tel: 021-222-8196.


# ஈர விழிகளுடன்...



## அமரர் யோசப் சூசை அன்ரனி

நேற்று வரைக்கும் தென்றல் தானே
இன்று மட்டும் எப்படிப் புயலாய்?
நேற்று வரைக்கும் தூறல் தானே
இன்று மட்டும் எதற்காக இடியுடன்?
நேற்று வரைக்கும் யூட் இன் அப்பா
இன்று மட்டும் எதற்காக வெற்றுடலாய்?
நல்லவரே நீங்கள் நற்கதி அடைந்து விட்டீர்
நாங்கள் நெஞ்சுடைந்து குமுறுகிறோம்.
எம்மை விட்டு நீங்கள் பிரிந்து சென்றாலும்
எம் நெஞ்சகலா ஈர நினைவுகளோடு!..

மண்ணில்: 15.10.1949
விண்ணில்: 18.04.2008

3ஆம் வருட வணிகத்துறை மாணவர்கள்
யாழ்.பல்கலைக்கழகம். (73475)

## 'ஞானச்சுடர்' வெளியீடு

வடமராட்சி, ஏப்.24

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான "ஞானச்சுடர்" ஆத்மீகச் சஞ்சிகையின் சித்திரைமாத இதழ் வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பேரவைத் தலைவர் எஸ்.அருள்லிங்கம் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை டாக்டர் வீ.பாலகிருஷ்ணனும், மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரனும் நிகழ்த்துவார்கள். (202-236)

# மரண அறிவித்தல்

## மிக்கேல் ஆசீர்வாதம்



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மிக்கேல் ஆசீர்வாதம் (22.04.2008) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.04.2008) வியாழக்கிழமை பிற்பகல் அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, நாவாந்துறை பரலோக மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
போதகர்-N.மரியநாயகம்
(பேறாமகன்).

S.D.A.R.M.CHURCH,
30/4, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (73476)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை முதல்வர்
உயர்திரு. குழந்தைவேலு வாகீசன்
(Sp.Trd Sc., B.A)
அவர்கள் கல்வியியலில்
முதுகலைமாணிப்பட்டம் (M.Ed)
பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி,
வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல
பட்டங்கள் பெற்று சீரும்
சிறப்புடனும் நீடூழி வாழ மனதார
வாழ்த்துகின்றோம்.

யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்,
நீர்வேலி. (73471)
பாடசாலைச் சமூகம்.

# எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 14 . 07 . 1930



மறைவு 22 . 04 . 2000

## அமரர் சின்னத்துரை சோமசேகரம்

(ஓய்வூதியர், யாழ். மாநகரசபை)

திதி: சங்கடஹர சதுர்த்தி 24.04.2008

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகி விட்ட
எங்கள் அன்புத் தெய்வத்தின்
எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (73437)

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# United Nations Development Programme

UNDP

The United Nations Development Programme (UNDP) is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

UNDP, Sri Lanka is seeking to fill the following positions for its Transition Recovery Programme and/or Mine Action Project. The successful candidates will work with a team of professionals and strengthen UNDP's ability to provide assistance to beneficiaries on the ground. A brief description of the duties and responsibilities of the positions follow.

## VACANCIES

### 1. *FIELD ASSISTANT* — DUTY STATION: JAFFNA
**TRANSITION RECOVERY PROGRAMME (TRP)**

**Under the overall supervision of the Field Coordinator, the incumbent will:**
- Conduct periodic monitoring of implementing partners, suggesting corrective measures to be undertaken when necessary for community infrastructure projects
- Provide technical assistance and necessary support to implementing partners, including assistance to develop tools and systems for project planning and implementation
- Provide technical assistance to institutions and beneficiaries supported directly or indirectly by TRP
- Assist the TRP team in preparation of technical documents such as drawings, bills of quantities and tender document
- Ensure lessons learnt and best practices are incorporated into formulation and implementation of sub-projects
- Prepare and ensure the timely submission of monitoring and evaluation reports
- Monitor the technical aspects of infrastructure projects
- Contribute to knowledge networks and communities of practice
- Perform any other duties as required

*Education:*
- Secondary education with National Certificate in Technology (NCT-civil), National Diploma in Technology (NDT-civil), Civil Engineering or related qualification is highly desirable

*Experience::*
- 3 years relevant work experience is highly desirable

*Competencies:*
- computer software packages, such as MS Excel, MS Word, AutoCAD

### 2. *ADMINISTRATION & FINANCE ASSISTANT* — DUTY STATION: COLOMBO
**PROGRAMME MANAGEMENT UNIT (PMU)/ TRANSITION RECOVERY PROGRAMME & MINE ACTION PROJECT**

**Under the overall supervision of the Senior Programme Manager, the incumbent will:**
- Establish/ maintain sound financial and administration system/ procedures for PMU in accordance with UNDP rules and regulations
- Handle all petty cash transactions, and maintain computer records of all accounts and financial transactions at PMU
- Provide accounting reports/ statements as required; regularly update the office inventory and maintain records; and maintain all staff personal records and all filing systems
- Ensure that office equipment and other office needs are met in a timely manner, and equipment is maintained and in good order
- Manage appointments, telephone calls and office mail for the PMU
- Manage office drivers and use of office vehicles, including delivery, transportation, maintenance and updating of vehicle log book
- Manage the office janitorial staff, and supervise the daily maintenance of office premises and necessary repairs
- Organize steering committee meetings, workshops, conferences, etc., in close coordination with the Field Operations Team (FOT)
- Liaise with the UNDP Country Office, particularly FOT, on the administrative, operations and logistics needs of the PMU and Field Offices, and ensure efficient and timely delivery of support services
- Assist with PMU's programme implementation and project management arrangements, and liaise with the Field Offices, when necessary
- Ability to prepare minutes of meetings and draft correspondence is desirable but not essential
- Perform any other duties as required

*Education:*
- G.C.E. (Advanced Level) is required. A diploma or degree in preferably, management, business administration, finance, accounting or related field, is desirable

*Experience:*
- 3 years relevant experience in the areas of finance, procurement, administration, logistics and/or accounting

*Competencies:*
- Knowledge of UNDP/ UN rules and procedures, and Peoplesoft ATLAS will be an advantage
- Experience in using relevant computer software packages, including MS Word, MS Excel and PowerPoint. Knowledge of database packages is desirable

### 3. *INFORMATION TECHNOLOGY (IT) ASSISTANT* — DUTY STATION: COLOMBO
**PROGRAMME MANAGEMENT UNIT (PMU)/ TRANSITION RECOVERY PROGRAMME & MINE ACTION PROJECT**

**Under the overall supervision of the Senior Programme Manager, the incumbent will:**
- Support the implementation of IT management systems and strategies
- Ensure the effective functioning of PMU hardware and software packages, including performance of specific technical functions such as changing of hardware electronic components (disks, memories, network wiring, power sources, etc.) and routine repairs; installation of commercial and in-house developed software and related upgrades; upgrading patch and anti-virus programs; monitoring of file server traffic, usage and performance; and support to users in backing up and restoring their files, as well as in virus detection, removal and prevention
- Support networks administration, including assistance in trouble-shooting and monitoring of network problems; assistance in backup and restoration procedures for local drives; and ensure 100% availability of network resources
- Provide administrative support, including maintenance of an up-to-date inventory of software and hardware; maintenance of a filing system and library of reference materials for TRP and MAP; and research and retrieval of data from internal and external sources and preparation of statistical charts, tables, reports, PP presentations, etc.
- Ensure facilitation of knowledge-building and knowledge sharing at TRP and MAP
- Contribute towards the design, installation and maintenance of database, including participation in designing a database for monitoring and evaluation of projects; installation of a database system at PMU and Field Offices; maintenance and troubleshooting of database system; and extraction of data and preparation of statistical charts, tables, reports, etc.
- Perform any other duties as required

*Education:*
- IT-related diploma with relevant certifications in hardware management and software applications. A university degree in Computer Science is desirable.

*Experience::*
- 3 years relevant work experience, including network administration and management of hardware and software platforms

*Competencies:*
- Ability to provide IT support services, and some experience in client support, such as Help Desk or User Support Unit
- Good knowledge of PC/LAN operating systems, Microsoft Windows, corporate ICT security and viral protection systems
- Knowledge of Visual basic, SQL languages and database management is desirable
- Ability to perform a variety of standard specialized and non-specialized tasks and work processes

**Other requirements for ALL positions 1, 2 & 3 above:**
* Good knowledge of English, and Tamil and/or Sinhala
* Motivated, flexible, and capable of working under pressure
* Demonstrated behaviour of professional and personal ethics, transparency and openness
* Willingness to travel to the conflict-affected districts in the North and East of Sri Lanka
* Efficient, results-based and client services-oriented; mature judgment combined with a proactive and resourceful approach to problem solving; excellent communication skills and ability to work in a multi-cultural team; and strong negotiation, organizational and time management skills

Qualified Sri Lankan Nationals are invited to send an updated CV containing educational and professional qualifications and work experience with the names of 2 non-related referees and contact telephone number on or before 05 May 2008. Please visit http://www.undp.lk for detailed Terms of Reference. Applications should be addressed to the Human Resources Unit-UNDP 202-204, Bauddhaloka Mawatha, Colombo 7 indicating the position and Duty Station applied for on top left hand corner of envelope or E-mail: kalpana.desilva@undp.org, with the position and Duty Station in the subject line. UNDP will only be able to respond to those applicants in whom there is further interest. Qualified female candidates are encouraged to apply.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசதியீனங்கள், குறைபாடுகள் நிலவுகின்றபோதும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக உழைக்கும் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய ஆசிரியர்கள்

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பழைமையான ஒரு பாடசாலை மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம். பாடசாலையில் தற்போது 125 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இதில் 75 வீத மாணவர்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்பவர்கள். தரம் 1 முதல் தரம் 5 வரை வகுப்புகளைக் கொண்டுள்ள இப் பாடசாலையில் ஐந்து நிரந் தர ஆசிரியர்களும் ஒரு தொண்டர் ஆசிரியரும் கற்பிக்கின்றார்கள்.


பாடசாலையின் முகப்புத் தோற்றம்

ஆங்கிலப் பாடத்திற்கான பகுதிநேர ஆசிரியர் வாரத்தில் இரண்டு நாள்கள் இப் பாடசாலைக்குச் சமூகம் கொடுத்து கற்பித்து வருகின்றார்.

அதிபர் குட்டித்தம்பி இராசநாயகம் பாடசாலையின் நிலை பற்றித் தெரிவித்ததாவது:

பாடசாலைக்கு வரும் பிள்ளைகளின் பெற்றோர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள்.

தமது வறுமையிலும் பிள்ளைகள் நல்ல முறையில் கற்க வேண்டும் என்ற ஆதங்கத்துடன் அவர்கள் பிள்ளைகளை அனுப்புகின்றார்கள். பெற்றோர்களின் நம்பிக்கை வீண் போகாதவகையில் பிள்ளைகளுக்கு உரிய கல்வியைப் புகட்ட நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

பிள்ளைகளின் கல்விக்காகத் தொண்டர் ஆசிரியருக்கான நிதி உதவியை அதிபர் வழங்குவதுடன் பாடசாலையின் மலசல கூடத்தைத் துப்புரவு செய்யவும் பண உதவியைச் செய்கின்றார்.

கடந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஒரு மாணவன் சித்தி அடைந்துள்ளார். இவ்வாண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு 23 பிள்ளைகள் தோற்றவுள்ளனர். ஆகக் குறைந்தது நான்கு மாணவர்கள் சித்தி அடைவார்கள் என்ற நம்பிக்கை அதிபர், ஆசிரியர்களிடம் காணப்படுகின்றது.

இதற்காக ஆசிரியர்கள் மாலை நேர வகுப்புகள் மற்றும் சனி, ஞாயிறு, போயா நாள்களிலும் விசேட வகுப்புகள் ஆகியவற்றை நடத்தி வருகின்றார்கள்.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் இயங்குகின்றது. மட்டுப்படுத்திய வரைப் பழைய மாணவர்களே பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வருகின்றார்கள். இவர்களுடைய உழைப்பு மாணவர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கின்றது.

இதேபோன்று பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தமது பங்களிப்பை வழங்குகின்றது. வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்திக்குத் தமது பங்களிப்பை வழங்குகின்றார்கள்.

## ஆசிரியர் ஓய்வறை, நூலக வசதிகள் விரைவில் ஏற்படுத்தப்படவேண்டும்

தரம் 5 வகுப்பிற்குரிய தளபாடங்கள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. கட்டட வசதிகள் போதியளவு உள்ளன.

பாடசாலையின் நான்கு புறமும் வேலிகள் இல்லாமையால் பாடசாலை வளாகம் திறந்த வெளியாகக் காணப்படுகின்றது. இதனால் சில வேளைகளில் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றது.

தொடர்ந்து ஐந்து வருடங்களாக தமிழ்த் தினப் போட்டி மாகாண மட்டம் வரை மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றார்கள்.

கோட்டம், வலயம், மாவட்ட மட்டங்களில் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார்கள். சிறுவர் அரங்க நாடகத்தில் பரிசில்களை வென்றுள்ளனர். ஆங்கில தினப் போட்டி, விளையாட்டுப் போட்டிகளில் ஆகியவற்றில் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கு கொள்கின்றார்கள்.

விளையாட்டு மைதானம் இல்லாத போதிலும் பாடசாலை முற்றத்தில் விளையாட்டுப் போட்டிகள் திறம்பட இடம்பெற்று வருகின்றன.

ஒன்று, இரண்டு உபகரணங்களுடன் சிறுவர் பூங்கா காணப்படுகின்றது. சிறுவர் பூங்காவுக்குப் போதிய வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த




இந்த மாணவர்களின் தேவையை அறிந்து உதவிசெய்ய அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும். அதிபரும் இதில் ஊக்கமாக உள்ளார்.

அதிபர், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உதவி கேட்டு எழுதிய கடிதங்களுக்குப் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் பதிலளிக்கவில்லை எனவும் ஒரு சில நிறுவனங்கள் பதில் அளித்துள்ள போதிலும் பயன்கள் மாணவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லையென அதிபா, ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 400 இற்கும் மேற்பட்ட புத்தகங்கள் காணப்படுகின்ற போதிலும் நூலக வசதி, தளபாட வசதிகள் இன்மையால் அவை அலுமாரிகளில் பூட்டி வைக்கப்பட்டுள்ளன.

பயன்படுத்தப்படாத நிலையில் கட்டடம் ஒன்று காணப்படுகின்றது. இக் கட்டடத்தைப் புனரமைப்புச் செய்தால் நூலகம், ஆசிரியர் இளைப்பாறும் அறை போன்றவற்றிற்குப் பயன்படுத்த முடியும். உதவிகள் ஏதும் கிடைக்காமையால் அந்தக் கட்டடத்தைத் திருத்தமுடியாதநிலைகாணப்படுகின்றது.


பாடசாலை அதிபர்
குட்டித்தம்பி இராசநாயகம்

ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் பெற்றோர்களும் உதவி செய்து வருகின்றார்கள். ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் கண்காட்சியிலும் தமது திறமையை வெளிப்படுத்தி பரிசில்களை வென்றுள்ளனர்.

இவ்வாண்டு தரம் 1 இற்கு 23 மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளார்கள். பாடசாலை மாணவர்களின் சுகாதார விடயத்தில் பொது சுகாதார பரிசோதகர், சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் மாதாந்தம் வருகை தந்து கண்காணித்து வருகின்றார்கள். பல் பரிசோதனைகளுடன் ஏனைய பரிசோதனைகளும் செய்யப்பட்டு மேலதிக சிகிச்சை தேவைப்பட்டால் உரிய வைத்திய நிலையங்களுக்கும் மாணவர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.


இடம் பெயர்ந்து செய்த தொழில்களையும் இழந்து அரசாங்கம் வழங்கும் நிவாரணத்தையும், அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் உதவிகளையும் நம்பி எமது வாழ்க்கையை கடத்திக் கொண்டு வருகின்றோம் என்கிறார் மாணவன் ஒருவரின் தந்தையார். இத்தகைய நிலை எமது பிள்ளைகளுக்கும் ஏற்படக் கூடாது என்பதினால் எமது பிள்ளைகள் நல்ல முறையில் கற்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நாம் பாடுபட்டு வருகின்றோம் என்ற அவர் - அதிபர், ஆசிரி யர்கள் பிள்ளைகளில் காட்டும் அக்கறை பிள்ளைகளின் எதிர் காலத்திற்கு நிச்சயம் உறுதுணையாக அமையும் எனவும் அவர் உறுதியளித்தார். *

- பவித்திரன் -


அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவர்கள் அண்மையில் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தனர். அதன் போது 'உதயன்' அலுவலகத்திற்கும் மாணவர்கள் வருகை தந்து பார்வையிட்டனர். 'உதயன்' அலுவலகத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் நிற்பதை படத்தில் காணலாம். (படம்: நேசன்)


கரணவாய் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. போட்டியின் இடைவேளையில் மாணவர்கள் ''இசைவும் அசைவும்'' நிகழ்வில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.


சாரணர் இயக்கத்தந்தை 'பேடன் பவல் பிரபு' தின நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. நிகழ்வுக்கு வருகைதந்த சாரண மாவட்ட ஆணையாளர்கள் மற்றும் விருந்தினர்களை சாரணர் மாணவர்களால் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:தென்னவன்)


கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் மாணவர் தலைவர் சி.சிவகுமாருக்கு வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் சின்னம் சூட்டி சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரவிழிகளுடன் ஆண்டொன்றில்

அன்னை மடியில்: 16.02.1949

ஆண்டவர் மார்பில்: 06.05.2007



# அமரர் மகாலிங்கம் சூரியகுமார்

## திதி: 24.04.2008

எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில்கொண்ட எமது அன்புத் தெய்வமே, அப்பா!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
எங்கள் துயர் இதுபோல் நூறாண்டு சென்றாலும் மாறாது
அப்பா நீங்கள் நடந்து சென்ற பாதையில் முள் இருந்ததா இல்லையே
அடுத்தவரின் சொல் இருந்ததா இல்லையே
நீங்கள் காட்டிய பாசத்தீயில் உழுன்று வாடுகின்றோம் நாங்கள்

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, மகன் - சதீஸ்குமார், மகள்மார் - சியாமினி, துஷ்யந்தி
மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள் - மகேந்திரகுமார், கலையரசி, சுரேந்திரகுமார், விஜயகுமார்,
மைத்துனர், மைத்துனிமார்.

தகவல் : சோமா விவேகானந்தன் (பெறாமகள்)
10/1, தாமரை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(73387)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.







மல்லாவியில் இடம்பெற்ற கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் பலியான வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் அருட்திரு கருணாரட்ணம் அடிகளாரின் நினைவு ஆராதனைகள் நேற்றுமுன்தினம் யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றன.

ஆராதனை நிகழ்வில் கருணாரட்ணம் அடிகளாரின் உருவப்படத்தை முதலாவது படத்திலும் மறைமாட்டக் குருமுதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் குருமார்கள் கூட்டுத்திருப்பலி ஆராதனைகளில் கலந்துகொண்டிருப்பதை அடுத்துள்ள இருபடங்களிலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# கிழக்குத்தேர்தல் முடிவடைந்த கையோடு பொருள்களின் விலை எகிறப்போகின்றது

## அபாயச் சங்கு ஊதுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஏப். 24

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிந்ததும் எரிபொருட்கள், பால்மா வகைகள், அரிசி போன்றவற்றின் விலைகளையும் நீரின் வற் வரியையும் அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது என்று ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவும் இச் சந்தர்ப்பத்தில் அதற்கான கட்டுப்பாட்டு விலையை அரசு நிர்ணயித்தது பிழையென்றும் அக்கட்சி கூறியுள்ளது.

ஐ.தே.கட்சியின் எம்.பி. ரவி கருணாநாயக்கவே இதனைத் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியயதாவது:-

தமிழ் - சிங்கள புதுவருடத்தை மக்கள் மிகவும் கஷ்டப்பட்டே கொண்டாடினர். கடன்பட்டும், தமது பொருட்களை அடகு வைத்தும் மக்கள் புதுவருடத்தைக் கொண்டாடினர்.

இப்படியானதொரு நிலையில் அரசு அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்துள்ளது. இது அரசின் மிகவும் பிழையான முடிவு.

தேர்தலுக்காக மக்களை ஏமாற்றுவதற்காகவே அரசு இதைச் செய்துள்ளது.

இந்த விலை நிர்ணயிப்பால் ஏற்படப்போகும் பிரச்சினைபற்றி அரசு எண்ணிப்பார்க்கவில்லை. இதனால் இப் போது பாரிய அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த விலை நிர்ணயிப்பால் இப்போது அரிசிக்கான பாரிய செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஒரு கிலோ அரிசியை 60 ரூபா, 65 ரூபா ஆகிய விலையில் விற்குமாறு அரசு நெல் ஆலை உரிமையாளர்களைக் கேட்கின்றது. அந்த விலைக்கு விற்பனை செய்யத் தமக்கு நெல் கிடைப்பதில்லை என்று நெல் ஆலை உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

அரசின் இந்தப் பிழையான முடிவால் அரிசிக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் பட்டினியை எதிர்நோக்கியுள்ளனர்.

இது மாத்திரமின்றி கிழக்குத் தேர்தல் முடிந்ததும் எரிபொருள்கள், பால்மா வகைகள், அரிசி வகைகள் போன்றவற்றின் விலைகளையும் நீர் வற்வரியையும் அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறான முறையில் நாட்டை ஆட்சி செய்ய முடியாது.

நாட்டை சரியான முறையில் ஆட்சி செய்ய முடியாதுவிட்டால் அரசு ஆட்சியில் இருந்து உடன் விலகவேண்டும் - என்றார். (உ)

## தேர்தல் வன்முறைகள் குறித்து ஐ.தே.கட்சி ஆறு முறைப்பாடு

கொழும்பு, ஏப்.24

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுடன் தொடர்புபட்ட சட்டவிரோதச் செயற்பாடுகள் மற்றும் வன்முறைகள் குறித்தான ஆறு முறைப்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் திணைக்களத்திடம் முன்வைத்துள்ளது.

தேர்தலுக்காக அரச வளங்களைப் பயன்படுத்துதல், அரச உத்தியோகத்தர்களை அச்சுறுத்தல், ஆட்கடத்தல் என்பன தொடர்பில் இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என ஐக்கிய கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் உறவினர் பட்டிருப்புப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டமை மற்றும் ஆளுங்கட்சி வேட்பாளர்கள் பிரசார நடவடிக்கைகளுக்காக அரசகட்டடங்களைப் பயன்படுத்துதல் போன்ற விவகாரங்கள் குறித்தே ஐக்கிய தேசியக் கட்சி இந்த முறைப்பாடுகளைச் செய்துள்ளது.

அரச சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் அரச வாகனங் களைத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது குறித்தும் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் திணைக்களத்திடம் சுட்டிக்காட்டியுள்ளது. (த)

## பலூனில் பறந்தபடி நடுவானில் திருமணம்

புனேயை சேர்ந்த ஷீத்தல் என்ற பெண், தன் ஆசைப்படி 600 அடி உயரத்தில் பலூனில் பறந்தபடி திருமணம் செய்துள்ளார். போபாலைச் சேர்ந்த கணினிப் பொறியியலாளர் வைபவ்வுக்கும் ஷீத்தலுக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது.

திருமணத்தை உலகமே வியக்கும் சாகச நிகழ்ச்சியாகச் செய்யவேண்டும் என்பது ஷீத்தலின் விருப்பம். ஏப்ரல் 19ஆம் திகதி திருமணம் என்று நாள்குறிக்கப்பட்டது. கடந்த சனியன்று அதிகாலை, ஆக்ஸ்போர்ட் கோல்ப் மைதானத்தில் பலூனில் இணைக்கப்பட்டிருந்த கூடையில் மணமக்கள், புரோகிதர் மிலிண்ட், மணமக ளின் தந்தை கமலாகர் மகாஜன் ஆகியோர் ஏறினர். 600 அடி உயரத்தில் பலூன் பறந்தபோது, திருமணம் நடைபெற்றது.

இந்தத் திருமணத்திற்கு மொத்தம் 6 லட்சம் ரூபா செலவானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# தொண்டுப் பணியாளர்கள் படுகொலை; அரச விசாரணையில் நம்பிக்கையில்லை!

## பட்டினிக்கு எதிரான நிறுவனம்

இலங்கையில் தனது பணிகளை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ள பட்டினிக்கு எதிரான அமைப்பு தனது பணியாளர்கள் 17 பேர் மூதூரில் படுகொலை செய்யப்பட்டமை குறித்து அரசு மேற்கொண்டுள்ள விசாரணைகளில் நம்பிக்கையில்லையெனக் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச பிரசித்திபெற்ற நபர்களின் சுயாதீனக் குழு இலங்கையில் தனது பணி களை முடித்துக் கொள்ள தீர்மானித்ததைத் தொடர்ந்தே பட்டினிக்கு எதிரான அமைப்பு இலங்கையிலிருந்து வெளியேறத் தீர்மானித்ததாக அமைப்பின் பேச்சாளர் லுசிலே குரொஸ்ஜீன் தெரிவித்துள்ளார்.


மூதூரில் தனது பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டமை குறித்த விசாரணைகளின் நம்பகத்தன்மைக்கு சர்வதேச பிரசித்தி பெற்ற நபர்களின் சுயா தீனக் குழு இலங்கையில் பிரசன்னமாகி யிருக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## பிரபஞ்சத்தில் இறைவன் இறைவனுக்குள் பிரபஞ்சம்

*பிரபஞ்சத்தில் இறைவன் பேரொளியுடன் திகழ்கின்றார். பிரபஞ்சம் இறைவனுக்குள் பேரொளியுடன் திகழ்கின்றது. இதுவே இறைவனுக்கும் பிரபஞ்சத்துக்கும் இடையே உள்ள பிரிக்க இயலாத நட்பு. இதையே இங்குள்ள அனைவருக்கும் நான் கூறுகின்றேன்.*

**விஸ்வம் விஷ்ணு ஸ்வரூபம்:**

*பிரபஞ்சமே விளைவு; இறைவனே அதன் காரணம். யாருமே இறைவனுக்கும், படைப்புக்கும் இடையே உள்ள உறவைப் புரிந்து கொள்ளவோ, பிரிக்கவோ, துண்டு படுத்தவோ இயலாது. இவ்வுலகம் காரிய காரண சம்பந்தமானது. பிரபஞ்சத்தில் எதைக் கண்டாலும் அது தெய்வத்துவமேயன்றி வேறல்ல. இங்குள்ள அனைத்துப் பொருள்களும், ஜீவராசிகளும் தெய்வத்துவம் நிறைந்தவை. விஸ்வம் விஷ்ணு ஸ்வரூபம்: வடிவங்கள் பல்வகைப்பட்டவையாக இருந்தாலும், அடிப்படையில் இவையனைத்தும் தெய்வீகமானவை. நிலையற்ற உலக இன்பங்களால் ஈர்க்கப்பட்டு, நிராசையிலும், ஏமாற்றத்திலும் மூழ்கிவிடுவதால், தெய்வத்துவத்தை நாம் புரிந்துகொள்ள இயலவில்லை.*



சாயி சிந்தனை

# கல்வியில் மேன்மை அடையும் போது வீடு போன்று பின்தங்கிய தன் கிராமத்தையும் உயர்த்த விரும்புகிறார்

## க.பொ.தவில் 9ஏபி சித்திபெற்ற கொடிகாமம் மாணவி

கல்வியில் மேன்மை பெறவேண்டும் என்பது எனதும், எனது குடும்பத்தவரின் விருப்பமுமாகும். நான் தென்மராட்சியில் மிகவும் பின் தங்கிய பகுதியான தென்மராட்சி கிழக்கில் கொடிகாமம் கிராமத்தைச் சேர்ந்த மாணவியாகும். நான் கல்வியில் மேன்மையடையும் போது எனது வீடுபோன்று எனது பிரதேசத்தையும் வளமாக்க வேண்டும் என்பதே எனது குறிக்கோள். இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

தென்மராட்சி கிழக்கில் மிகமுக்கியமான பாடசாலையான கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி 9ஏ, 1பி சித்தியைப் பெற்ற மாணவி செல்வி நவரத்தினம் - கோகினி.

அவர் உதயனுக்குத் தமது குறிக்கோள் குறித்து மேலும் தெரிவித்ததாவது:

ஆரம்பக் கல்வியை முதலில் எனது அம்மாவிடம் முறையாக கற்றுக் கொண்டேன். கொடிகாமத்தில் அப்பொழுது கல்விச் செயற்பாடுகளில் இருந்த அன்னை திரேசா முன்பள்ளியிலும் கல்வியை தொடர்ந்தேன். எமது பகுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக வகுப்பு 4 தொடக்கம் 8வரை இணுவில் மத்திய கல்லூரியில் கல்வியை தொடர்ந்தேன். பின்னர் மீளவும் 2004இல் எமது பகுதிக்கு சென்று திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் - கல்வியைத் தொடர்ந்தேன்.

ஆனாலும் எனது வீட்டில் மின்சாரம் (விளக்குகள்) இல்லாததால் நான் மண்ணெண்ணெய் விளக்கில் எனது கல்வியை தொடர்ந்தேன். எனது ஏனைய மாணவர்களுடன் பார்க்கும் பொழுது நான் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே படித்தேன்.

எனது கல்வி மேம்பாட்டிற்காக பாடசாலையில் ஆசிரியர்கள் ஊக்கமளித்தார்கள். அது மட்டுமல்லாமல் பத்திரிகைகளை எனது தகப்பனார் வாங்கித் தருவார். கல்வியை மேலும் பெற சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் உப பணிமனை பொதுநூலகத்தை தாராளமாக பிரயோசனப்படுத்தினேன். அது மேலும் எனது கல்விக்கு வளம் சேர்த்தது. இதனால் நான் ஏற்கனவே போட்டிகளில் பங்குபற்றி பரிசிலாக பெற்ற புத்தகங்களை ஏனையோ ரும் பயன்படுத்தும் விதமாக எங்கள் அப்பா பொது நூலகத்திற்கு அந்த புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கினார்.

**உதயன் பத்திரிகை**

உதயன் பத்திரிகை நிறுவனத்தினர் கல்விசார்ந்த செயற்பாடுகளை தரம் 5, தரம் 11 க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு வினாவிடைகள், பொது அறிவுகள் வழங்கி உற்சாகப்படுத்துவதுடன் போட்டிகள் நடத்தி எங்களை வழிப்படுத் தும் நிறுவனம். நானும் உதயன் நிறுவனத் தால் நடத்தப்பட்ட (CHESS) சதுரங்கப் போட்டிகளில் பங்குபற்றி உதயன் அதிகாரிகளிடமிருந்து பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டேன். அது எனது வாழ்வில் மறக்க மு டியாத சம்பவமாக இருக்கின்றது.



எனது கல்வியில் - கலைப் பிரிவை தேர்ந்தெடுத்துள்ளேன். நான் தமிழுடன் சேர்ந்து ஒன்றிக்க வேண்டும் என்பதற்காக தமிழைப் பாடமாகப் படிக்கவுள்ளேன். அது மட்டுமல்லாமல் என்னை வளம்படுத்திய திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலேயே தொடர்ந்து கல்வி கற்கவுள்ளேன். அங்கு கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்று படித்து எனது பிரதேசத்தை - கிராமத்தை வளம்படுத்துவதே எனது முக்கிய பணியும் குறிக்கோளுமாகும்.

**எங்கள் பாடசாலை**

எமது பாடசாலை தென்மராட்சி கிழக்கில் மிக முக்கியம் வாய்ந்த பாடசாலையாகும். கணனி நிறைய காணப்படுகிறது. ஆசிரியர்களது வளமும் அர்ப்பணிப்பும் தாராளமாகக் காணப்படுகிறது. இதனால் கல்வியில் மேம்பாடு அடைகின்றோம். சகல வளங்கள் இருக்கின்றது. என்றாலும் விஞ்ஞானப் பிரிவு இல்லாதது பெரும் குறையாக காணப்படுகிறது. எனவே கூடிய விரைவில் மாணவர்களது நலனை கருத்தில் கொண்டு விஞ்ஞானப் பிரிவு உருவாக்க கல்விச் சமூகம் முன்வர வேண்டும். - இதனால் எதிர்காலத்தில் தென்மராட்சிக் கிழக்கில் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், ஒரு வசதியுடன் கூடிய தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்படல் வேண்டும் என்பது எனது அவா. அதில் எங்கள் பிரதேச மாணவர்கள் கல்வியை தொடர்ந்து நல்ல கல்வியுடன் கூடிய சமூகம் உருவாக வேண்டும். எதிர்காலம் என்போன்ற மாணவர்கள் ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும் கல்வியில் மேம்பாடு உள்ளவர்களாகவும் உருவாகி நிறைவான வாழ்வு வாழ வேண்டுகின்றேன்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29 ★ 03 ★ 1934

மறைவு 19 ★ 04 ★ 1995

**அமரர் சின்னையா ஆறுமுகம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: சதுர்த்தி

ஆண்டுகள் பதின்மூன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
நாளும் உங்கள் நினைவினிலே
நாமிங்கு வாழுகின்றோம்.

(சி/552505)

வாகையடி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 24 03 1924

மறைவு 25 03 2008

**திருமதி இராசமணி சிங்கராஜா**

அன்பின் திருவுருவே பண்பின் சிகரமே
பாசத்தின் திருவிளக்கே - உங்கள்
நினைவு என்றும் எங்களை விட்டு நீங்காது.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.04.2008) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்

ஏழாலை மத்தி,
ஏழாலை. (73451)

உங்கள் பிரிவால் தவிக்கும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


இந்தியாவில் படியுங்கள்

**பிரிந்தாவன் கல்லூரி**

அரசின் அங்கீகாரம் AICTE
அனுமதியும்பெற்றது மற்றும் பங்களூர்
பல்கலைக்கழகத்துடன் இணைந்தது

Accredited at the 'A' level by NAAC
Email : info@brindavancollege.com
enquiry@brindavancollege.com
Website : www.brindavancollege.com

FREE SEMINAR & SPOT ADMISSIONS at COLOMBO

| VENUE | DATE | TIME |
|---|---|---|
| COLOMBO HILTON | 27.04.2008 | 2.30 p.m. |

With 2 A/L Passes

UNDERGRADUATE COURSES
* B.Sc. - COMPUTER SCIENCE, Physics, Maths
* B.Sc. - COMPUTER SCIENCE, Statistics, Maths
* B.Sc. - MICROBIOLOGY, Chemistry, Zoology
* B.Sc. - BIOTECHNOLOGY, Chemistry, Zoology
* B.Sc. - GENETICS, Biochemistry, Microbiology
* B.C.A - Bachelor of Computer Applications
* B.B.M - Bachelor of Business Management
* B.Com - Bachelor of Commerce

POSTGRADUATE COURSES
* M.Sc. - Biotechnology
* M.Sc. - Microbiology
* M.Sc. - Applied Genetics
* MBA
  Master of Business Administration
* MCA
  Master of Computer Applications

PRE - UNIVERSITY COURSES ( Equivalent to A level )
SCIENCE : PCMCs / PCMB / PCBHs COMMERCE : BACS

இலங்கையைச் சேர்ந்த 250 மாணவர்களுடன் படியுங்கள். இக்கல்லூரியில் சுமார் 600 இலங்கை மாணவர்கள் கல்விகற்றுப் பட்டம் பெற்றுள்ளார்கள்.
பட்டங்கள் இலங்கை பல்கலைக்கழக மானியக் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டது.


Building of Brindavan College of Engg., Dwarakanagar, Bagalur Main Road, Yelahanka, Bangalore - 63. Email : info@brindavancollege.com


Brindavan College of MBA/MCA, Dwarakanagar, Bagalur Main Road, Yelahanka, Bangalore - 63. Email : info@brindavancollege.com


Brindavan College of UG & PG, Vinayaka Layout, Bhoopasandra, RMV 2nd Stage, Bangalore - 94. Email : info@brindavancollege.com

For Details Contact : Company Secretarial Services (Pvt) Ltd.
#285C- 1/1 Stanley Tillakaratne Mw., Nugegoda. Tel.: 011 4580270 / 0777 317043
Join this year - Save one year


## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கொக்குவில், பொற்பதி வீதியில் பெறுமதி மிக்க ஆண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று நேற்று 23.04.2008 காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளவும்.

**S.சிறிதரன்,** பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி.
(73467) T.P.: 060 221 0235

## மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு, உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த மணப்பெண் வேண்டப்படுகிறார். பிறந்த திகதி, நட்சத்திரப் பாதம், குறிப்பு என்பவற்றுடன் தொடர்புகொள்ளவும். (73330)

விள.இல 5084, மே/பா உதயன்.

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கைதடி - நாவற்குளி அ.த.க. பாடசாலையில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு யாழ்.மாவட்ட வலயங்களுக்குட்பட்ட பாடசாலையில் கடமையாற்றும் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 தரம் IIஐச் சேர்ந்த பட்டதாரிகளும் அதற்கு மேற்பட்ட அதிபர் தரங்களில் உள்ளோரும் அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2 தரம் IIஐச் சேர்ந்த பட்டதாரிகளும் அதற்கு மேற்பட்ட தரங்களில் உள்ளோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பப் படிவங்களைத் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பாடசாலை அதிபர், கோட்டக் கல்வி அலுவலர் ஊடாக எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்தார். (202-207)

## தென்மராட்சி ஆசிரியர்களுக்கு செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.24

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்தார். (202-207)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்புகள் வணிகக்கல்வியும் கணக்கீடும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்த செயலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தெரிவித்தார். (202-207)

* * *

யாழ்ப்பாணம் .24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான கற்றல்/கற்பித்தல் பல்லூடகக்கருவி பயன்படுத்தல் செயலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

கடந்த பத்தாம் திகதி நடத்தப்பட்ட மேற்படி செயலமர்வில் கலந்துகொண்ட ஆசிரியர்களையும் ஆர்வமுள்ள ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்தார். (202-207)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 18 ★ 07 ★ 1921

உதிர்வு 25 ★ 03 ★ 2008

**அமரர் சிவக்கொழுந்து விவேகானந்தன்**

*எமது குடும்பத்தின் குலவிளக்காய்*
*அன்போடும் பண்போடும் பார்போற்ற*
*வாழ்ந்து எமக்கெல்லாம்*
*வழிகாட்டிய பெரியோனே!*
*உங்கள் சிரித்த முகமும் எறும்பின் சுறுசுறுப்பும்*
*எம் இதயங்களில் என்றும் நிலைத்திருக்கும்.*

(73381)


எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி, தந்தி மூலம் எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

393/39, கோயில் வீதி, நல்லூர். குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

அமரர்

**முருகேசு துரைராசா**



மலர்வு
30 ★ 08 ★ 1930

உதிர்வு
25 ★ 03 ★ 2008

திதி: அபரபக்க
சதுர்த்தி

புதுமலராய் பூத்து மண்ணில்
புன்னகைத்த எங்கள் அன்பு அப்பாவே!
இருயுகம் போல் இருக்குதப்பா
நீங்கள் இருந்த இடம் தவிக்குதப்பா
உங்கள் முகம் காணாது தவிக்கிறோம் அப்பா
ஆலமரமாய் இருந்துவிட்டு அவசரமாய்
போனீர்கள் எங்கள் அப்பா
இப்புவியில் நாங்கள் இருக்கும் வரை
எங்கள் இதயத்தில் ஏற்றி உங்களை
இறைஞ்சிடுவோம் அப்பாவே நாங்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

★ இன்று (24.04.2008) வியாழக்கிழமை அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு சுவிஸில் நடைபெறும்.

சுவிஸ். (73375)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 5ஆம் ஆண்டு நினைவுகளுடன்...



தோற்றம் 20 ★ 05 ★ 1927

மறைவு 24 ★ 04 ★ 2003

அமரர்

**தொம்மை பிலிப்பு**

*ஆண்டுகள் ஐந்து ஆனதோ பப்பா*
*அன்பான உம் திருவதனம் கண்டு*
*ஆறுதல் கூறும் அன்பு நிறை பப்பாவே!*
*ஆறுதல் இன்றித் தவிக்கிறோம் நாம் இங்கு*
*எம் உயிர் உள்ளவரை உங்கள்*
*நினைவுகள் என்றென்றும் எம்முடனே வாழும்.*

கச்சாய் வீதி,
கொடிகாமம். (73165)

நீங்கா நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஈரானுடனான புதிய நட்புறவு இலங்கைக்குத் தெம்பு தருமா?

அடுத்தவாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதி நிஜாத்தை வரவேற்பதற்காக இலங்கை அரசு தடல்புடலான ஏற்பாடுகளைச் செய்துவரும் இச்சமயத்தில் ஈரானிய அதிபரின் இந்த விஜயம் அமெரிக்கா விற்குப் பெரும் அதிருப்தியையும் எரிச்சலையும் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஈரான் அதிபரை இலங்கைக்கு அழைத்துப் பெரும் வரவேற்பு அளித்து, அந்நாட்டுடனான தனது உறவை வலுப்படுத்திக் கொள்வதை வெளிப்படுத்திக் கொள்ள இலங்கை முயல்கின்றது.

ஆனால் இந்த வரவேற்பு ஏற்பாடு அமெரிக்காவையும் மேற்குலகையும் கடும் விசனத்துக்குள்ளும் சீற்றத்துக்குள்ளும் ஆழ்த்தியிருப்பதாகத் தகவல்கள் கசிந்திருக்கின்றன.

ஈரான் தொடர்பில் இலங்கை அரசு கடைப்பிடித்து வரும் அதிதாராள நட்புறவுக் கொள்கைப்போக்குச் சம்பந்தமான தனது அதிருப் தியைத் தனது நாட்டில் உள்ள இலங்கைத் தூதுவரிடம் அமெரிக்கா உத்தியோகபூர்வமாக வெளியிடும் என்றும் கூறப்படுகின்றது.

ஏற்கனவே சில தினங்களுக்கு முன்னர் இரண்டுநாள் பயணமாக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்காவின் தெற்கு - மத்திய ஆசிய விவகாரங்களுக்கான சிரேஷ்ட பிரதி உதவிச் செயலாளர் டொனால்ட் காம்ப், இவ்விவகாரம் குறித்தும் இலங்கை அரச உயர் மட்டத்துடன் பேசி, அமெரிக்காவின் அதிருப்தியை நேரடியாக வெளிப்படுத்தியிருந்தார் என்றும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

'இனம் இனத்தைச் சேரும்' என்பார்கள். இப்போது ஈரானுடன் கொஞ்சிக் குலாவி உறவை விருத்தி செய்யும் மஹிந்த அரசின் போக்கு இந்தப் பழமொழியைத்தான் நினைவுபடுத்துகின்றது.

தம்முடைய தவறான செயற்போக்கினால் சர்வதேசக் கண்டனங்களையும், அதிருப்திகளையும் - ஏன் சர்வதேசத் தடைகள், கட்டுப்பாடுகள் என்பவற்றையும் கூட - எதிர்கொள்ள வேண்டிய ஒரே இக்கட்டில் சிக்கியிருக்கும் தோழமை சக்திகளாக ஈரான் அரசும் இலங்கை அரசும் உருவெடுத்துள்ளன. இப்படி சர்வதேச சமூகத்தால் - குறிப்பாக அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் - அதிருப்திக்கு உள்ளாகும் ஒரே அணியில் இருப்பதால் அவை தமக்குள் உறவை இறுக்கிக்கொள்ள முயல்கின்றன போலும்.

ஏற்கனவே இலங்கைக்கான ஆயுத தளபாட விநியோகங்களை அமெரிக்கா மட்டுப்படுத்தி அறிவித்து விட்டது. இலங்கைக்கான பொருளாதார உதவிகளையும் அது கணிசமாகக் குறைத்துள்ளது. அதேவேளை ஈரானுடனான இலங்கையின் புத்துறவைக் காரணம் காட்டி இலங்கைக்கு ஆயுதத் தளபாட வசதிகளையும் உதவிகளையும் வழங்குவதை இஸ்ரேல் இடைநிறுத்திவிட்டது. இதன் காரணமாக, இதுவரை புலிகளுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் தனக்குக் காலம் காலமாக ஆயுத, தளபாட வசதிகளையும் உதவிகளையும் தொடர்ந்து வழங்கிவந்த இஸ்ரேலின் நல்லுறவை இலங்கை இழக்கப் போகின்றது என்பது தெளிவாகிவிட்டது.

இதேசமயம், இதுவரை காலமும் நாட்டுக்குப் பெரும் அந்நிய செலாவணியையும், ஏற்றுமதி வருமானத்தையும், உள்ளூர் தொழில் வாய்ப்புகளையும் தாராளமாக ஏற்படுத்தித்தந்த ஐரோப்பிய நாடுகளின் ஏற்றுமதிச் சலுகை வசதியை அடுத்துவரும் மாதங்களோடு இலங்கை இழக்கப் போவதும் உறுதியாகிவிட்டது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்க மற்றும் ஐ.நா.சபையின் வர்த்தகத் தடைகள் உட்படப் பலமுனைத் தடைகள் கருக்கொண்டு உருக்கொண்டு வருகையில், அதுபோன்ற தடைகளை இலங்கையும் எதிர்கொள்ளும் சூழல் உருவாகியுள்ளது.

இந்தப் பின்புலத்தில்தான் இலங்கை - ஈரான் புதிய நட்புணர்வு மலர்ந்திருக்கின்றது.

ஒருதலைப்பட்சமாக அணு ஆயுதங்களை உற்பத்திசெய்யும் திமிர்ப் போக்கு, இஸ்ரேலை அழித்தொழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் தீவிரம் போன்றவை ஈரானுக்கு எதிரான சர்வதேச நிலைப்பாட்டை உருவாக்கியிருக்கின்றன.

அதேபோல, ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளைப் புறம்தள்ளி, அவர்களின் இருப்பையே அழித்தொழிக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாதச் சிந்தனையோடு, கொடூர மனித உரிமைமீறல்களுக்கு வழிகோலும் இலங்கை அரசுத் தலைமையின் திமிர்ப் போக்கும் போர்த் தீவிரமும் இலங்கைக்கு எதிரான சர்வதேச எரிச்சலுக்கு வழிசெய்துள்ளன.

இவ்வாறு ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதியாவின் அரச நிர்வாகமும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரச நிர்வாகமும் ஒரே மாதிரியாக சர்வதேச எரிச்சலுக்கு உள்ளானாலும்கூட இலங்கையின் நிலைமை மோசமானது.

உலகில் எரிபொருள் உற்பத்தி நாடுகளின் முன்னணி வரிசையில் இருக்கும் நான்காவது நாடு ஈரான். தாராள எரிபொருள், எரிவாயு மூலவளம் புதைந்து கிடக்கும் தேசம். கனியவளமும் தாராளம். அத்தகைய நாடு ஒன்று அமெரிக்கா போன்ற வல்லரசுகளைப் பகைத்துக் கொண்டு, ஐ.நா.போன்ற உலக நாடுகளின் கூட்டமைப்பு விதிக்கும் சர்வதேசத் தடைகளைத் துச்சமாக மதித்துப் புறக்கணித்து, உதாசீனம் செய்தபடி, ஒருதலைப்பட்சமாகத் தான் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் தங்கு தடையின்றி அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட முடியும்.

ஆனால், தேயிலை, இறப்பர், தைத்த ஆடைகள் மற்றும் பணிப் பெண்கள் சேவை போன்றவற்றை மேற்குலகுக்கு வழங்குவதன் மூலமே அந்நிய செலாவணியைத் திரட்டவேண்டிய இக்கட்டில் சிக்கியிருக்கும் இலங்கையால் இலகுவாக மேற்குலகைப் புறக்கணித்து விடமுடியாது. அப்படிப் புறக்கணித்து உதாசீனம் செய்ய முயலும் மஹிந்தர் அரசின் போக்கு இலங்கைக்கு விபரீத விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

ஆனால், இந்த யதார்த்தமும் உண்மையும் புரியாமல் - ஈரான் போன்ற சர்ச்சைக்குரிய நாடுகளின் ஆதரவை மட்டும் வைத்துக்கொண்டு - எந்தச் சவாலையும் சமாளிக்க முடியும் என்ற துணிச்சலோடு காய்களை நகர்த்துகின்றது மஹிந்தரின் அரசுத் தலைமை.

மேற்குலகின் வலுவைக் கவனத்தில் கொள்ளாமல் ஈரான், பாகிஸ்தான், சீனா போன்ற சர்ச்சைக்குரிய சக்திகளின் ஆதரவை நம்பி, அதில் தங்கி, தமது விபரீத முயற்சியை முன்னெடுக்கின்றது இலங்கையின் இந்த அரசு. இது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கும் எத்தனம் என்பது புரியவரும்போது மீள முடியாமல் தவிக்கும் இக்கட்டை அது உணர்ந்துகொள்ளும்.

அதுவரை, இத்தகைய புத்துறவும், புதுநட்பும் இலங்கை அரசுத் தலைமைக்குக் கரும்பாய்த்தான் இனிக்கும். அதன் விளைவுகளை அனுபவிக்கும்போது அது வேம்பாய்க் கசப்பது புரியவரும்.

# குறிப்பிட்ட சில வேலைத் திட்டங்களுக்கான மணலை முன்னுரிமை அடிப்படையில் வழங்க விசேட ஏற்பாடு

## ஒதுக்கப்பட்ட நிதியின் பயன்பாட்டுக் கால வரையறையே இதற்குக் காரணம் என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்ற புனரமைப்பு, புனர்நிர்மாணவேலைகளில் குறிப்பிட்ட சில வேலைத் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி மணல் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது என யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இத் தகவலைத் தெரிவித்தார்.

குறிப்பிட்ட திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் குறிப்பிட்ட கால எல்லைக்குள்பயன்படுத்தப்பட வேண்டியுள்ளமையே இதற்குக் காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்ற புனரமைப்பு, புனர்நிர்மாண வேலைகளில் சுனாமி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படுகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் வீடமைப்புத் திட்டம், சுனாமி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் சொந்தக்காரர்களினால் கட்டப்படும் வீடமைப்புகள், உலக வங்கித் திட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்கள், அரசாங்கத்தின் நிதி மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் என்பனவற்றுக்கு முன்னுரிமை வழங்கி மணல் விநியோகம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இற்றைவரை மணல் விநியோகத்திற்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்ட லொறிச் சாரதிகள் உடனடியாக மேற்கூறப்பட்ட திட்டங்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப் பத்திரத்திற்கான மணலை விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். குடத்தனையில் மணலைப் பெற்றுக் கொள்வதற்கான முன்னுரிமை ஏற்பாடுகள் வடமராட்சிக் கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரால் செய்யப்படும்.

இவ்வாறு உடனடியாக மணலை விநியோகிக்க இயலாத, அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட சகல லொறி உரிமையாளர்களும், சாரதிகளும் அந்த அனுமதிப்பத்திரங்களை யாழ்.மாவட்ட செயலக மணல் விநியோகப் பிரிவில் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இந்த அனுமதிப் பத்திரத்தை வைத்திருப் பவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்பதுடன் எதிர் காலத்தில் எக்காரணம் கொண்டும் மணல் விநியோகத்திற்காக அனுமதிப் பத்திரங்கள் எவையும் வழங்கப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏற்கனவே மணலுக்குரிய அனுமதி வழங்கப்பட்டுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள், சுனாமி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடமைக்கும் சொந்தக்காரர்கள், பிரதேச செயலர்கள் சம்பந்தப்பட்ட லொறி உரிமையாளர்களுடன் தொடர்புகொண்டு முன்னுரிமை அடிப்படையில் மணலைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இது சம்பந்தமாக ஏதாவது முறைப்பாடு இருப்பின் அரசாங்க அதிபருக்கு நேரடியாக அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

ஏனைய தேவைகளுக்கான மணல் விநியோகம் அடுத்தமாதம் 2 ஆம் திகதியில் இருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படும் - என்றார். (202)

# சர்வதேச பிரமுகர்கள் குழு விலகிச் சென்றாலும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தும்

## சொல்பவர் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

கொழும்பு, ஏப்ரல் 24

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் இலங்கை வந்த சர்வதேச பிரமுகர்கள் குழு தமது பொறுப்பிலிருந்து நீங்கினாலும் நீங்காவிட்டாலும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.''

- இவ்வாறு அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பு, பௌத்தாலோக மாவத்தையில் உள்ள வானிலை அவதான நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக இலங்கை வந்த சர்வதேச பிரமுகர்கள் குழுவில் 11 பேர் அங்கத்துவம் வகித்தனர். விசாரணைகளின் போது அவர்களது வரவு 10 வீதத்துக்கும் குறைவாகவே காணப்பட்டது. சிலர் ஒரு முறையேனும் விசாரணைகளில் கலந்துகொள்ளவில்லை. இவ்வாறான ஒரு நிலையில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

பொறுப்பேற்றுக்கொண்ட 8 மாதங்களின் பின்னர் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளிலிருந்து நீங்கிக்கொள்கின்றனர் என அவர்கள் அறிவித்துள்ளனர். அரசு இவர்களுக்கு எந்த விதமான அழுத்தத்தையும் கொடுக்கவில்லை.

அரசுக்குச் சார்பாக இயங்குவதற்கு சட்டமா அதிபருக்கு அதிகாரம் உள்ளது. அவரது தலையீடு இக்கமிட்டியின் செயற்பாடுகளுக்கு பாதகமாக உள்ளதெனக் கூறப்படும் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று. 150 வருடகால பழைமை வாய்ந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகளை அரசு எப்பொழுதும் மதித்தே வருகிறது. இந்நிலையில் சர்வதேச பிரமுகர் குழுவின் குற்றச்சாட்டுகளை ஏற்கமுடியாது - என்றார்.

# இலங்கை இனப்பிரச்சினைக்கு சகல தரப்புப் பேச்சே தீர்வு தரும்

## அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் கருத்து

கொழும்பு, ஏப். 24

இலங்கையின் இனப் பிரச்சினைக்குச் சகல தரப்புகளுடனும் பேச்சுகளை நடத்துவதன் மூலமே நியாயமான, நேர்மையான, நிலையான தீர்வொன்றை எட்டமுடியுமென அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பேர்னாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

வடக்கு - கிழக்கிலுள்ள மக்களுடன் கலந்துரையாடுவதே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான ஒரே வழியாகும். அத்தகையதொரு சந்தர்ப்பம் தற்பொழுது கிழக்கில் தோன்றியுள்ளது. அடுத்த மே மாதத்தில் கிழக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுத்த தீர்மானத்தின் மூலம் இது சாத்தியமாகியுள்ளது.

இலங்கையின் கிழக்கில் நடைபெறவுள்ள தேர்தலில் அரச தரப்பு, பிரதான எதிர்க்கட்சி, புலிகளைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள், அதிலிருந்து பிரிந்து சென்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற பல கட்சிகள் போட்டியிடுகின்றன.

இலங்கையின் ஸ்திரத்தன்மைக்காக கவனம் செலுத்துகின்ற சர்வதேச சமூகம், கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு அவை தராளமாக உதவிகளை வழங்குவதற்கு முன்வரவேண்டும். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி அவர்களை வன்முறைக் கலாசாரத்திலிருந்து அகற்ற உதவிக்கரம் நீட்டவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 13 | 25.04.2008 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: பஞ்சமி | பி.இ.01.09வரை |
| நட்சத்திரம் : | மூலம் |
| | பி.இ. 03.45 வரை |
| சுபநேரம் : | 05.59 - 07.29 |
| ராகுகாலம் : | 10.29 - 11.59 |

# தற்காலிகமாகக் கடமையாற்றிய உபதபாலதிபர்களில் 37 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்.மாவட்டத்திலுள்ள உப தபால் நிலையங்களில் தற்காலிகமாக கடமையாற்றி வந்த உப தபாலதிபர்கள் 37 பேருக்கு தபால் திணைக்களத்தினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் உப தபாலதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தபால் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

நீண்ட காலமாக தற்காலிகமாக உப தபாலதிபர்களாகக் கடமையாற்றி வரும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தபால் தொலைத் தொடர்பு அமைச்சரிடம் சம்பந்தப்பட்டோர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கோரிக்கையை அமைச்சர் ஏற்றுக்கொண்டமைத் தொடர்ந்து நாடெங்கும் தற்காலிகமாகக் கடமையாற்றி வந்த உபதபாலதிபர்களுக்கு மாவட்டம் மாவட்டமாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் தற்காலிக உபதபாலதிபர்களாகப் பணியாற்றியவர்களில் தேவையான தகமைகளைக் கொண்ட, குறைந்தது 6 மாதங்கள் சேவையாற்றிய 37 பேருக்கு உப தபாலதிபர் பதவிக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நிரந்தர நியமனம் பெற்றவர்களில் 10 வருடங்கள் தற்காலிகமாகப் பணியாற்றியவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் பணியாற்றி வரும் தற்காலிக உபதபாலதிபர்கள் யாழ்.பிராந்திய பிரதி தபால்மா அதிபரினால் அழைக்கப்பட்டு, தேவையான தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(202-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### தமியான் மத்தியாஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தமியான் மத்தியாஸ் அவர்கள் நேற்று (23.04.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தமியான்-ரெபேக்கா தம்பதியரின் அன்பு மகனும் மேரிஞானம்மாவின் அன்புக் கணவரும் யஸ்ரினாதிலகவதியின் (கனடா) அன்புத் தந்தையும் அருட்பிரகாசத்தின் (கனடா) அன்பு மாமனும் அல்போன்சின் அன்பு சிறியதந்தையும் அம்பிகாவின் சிறிய மாமனும் பஸ்ரன் (கனடா), தேஸ்ரன் (கனடா), சிந்துஜா, அகல்யா, சிந்துஜன், அனோஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.04.2008) வியாழக்கிழமை மு.ப.9மணியளவில் யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.4, ஒடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி.

(73470)

## நீங்கா நினைவுடன் ஓராண்டு

சத்திய வேள்விக்காய்
22 . 04 . 1932



சத்தியத் தீயுடன்
24 . 04 . 2007

### அமரர் சின்னத்தம்பி செல்லையா

அன்புத் தெய்வமே எங்கள் பப்பா!
அரவணைப்பும் அறிவுரையும் நற்பண்பும் நல்நட்பும்
ஒழுக்கமும் இரக்கமும் அடக்கத்தை அறத்தை
அன்புடன் வழக்களித்து
அடக்குமுறை அறுத்தெறிந்து வாழவைத்தீர்
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் விழிநீர் நிற்காது.

'கிளி இல்லம்',
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.
தொ.பே.021 226 4682

தங்கள் பிரிவால் வாடும்:
மனைவி: செ.பூங்கிளி, மகள்மார்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.

(73472)

## தென்மராட்சிப் பாடசாலைகளுக்கு பாடநூல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு தொகுதி பாடநூல்கள் கொண்டுவரப்பட்டு கடந்த திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

தரம்8 வகுப்பு மாணவர்களுக்குரிய வரலாறு, புவியியல், குடியியல் ஆகிய பாடப்புத்தகங்களும் தரம்7 மாணவர்களுக்குரிய ஆங்கிலம், சுகாதாரமும் உடற்கல்வியும், செயன்முறையும் தொழில்நுட்பமும் பாடப்புத்தகங்களும்-

தரம்10 மாணவர்களுக்குரிய குடியுரிமைக்கல்விப் பாடப்புத்தகமும், தரம் 11 மாணவர்களுக்குரிய விஞ்ஞானம், வரலாறு, சைவசமயம், விவசாயம், ஆங்கிலம், வடிவமைப்பும் தொழில்நுட்பமும் ஆகிய பாடநூல்களும் வந்துள்ளன.

தரம்11 மாணவர்களுக்குரிய தமிழ்பாட புத்தகங்கள் கிடைக்கவில்லையெனவும், கணித பாட புத்தகம் குறைந்த அளவு மட்டுமே கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## கோப்பாய் கோட்ட மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.24

கோப்பாய் கல்விக் கோட்ட இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் ஏற்கனவே நடத்துவதற்கெனத் திட்டமிடப்பட்டு காலநிலை சீரின்மை காரணமாகப் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை-

நாளை மறுதினம் கோட்டப் பாடசாலைகளிடையே நடைபெறவிருக்கும் தரம்.5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை பிற்போடபட்டுள்ளது எனக் கோட்டக் கல்வி அதிகாரி என்.சித்திரவடிவேல் தெரிவித்தார். (202)

## விஞ்ஞான சங்கம் நடத்தும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம் பிரிவு 'டி' நடத்தும் கருத்தரங்குத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட விரிவுரை மண்டபத்தில் (இல.308) கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் பி.அகிலன் 'யாழ்ப்பாணத்தில் மூவலகு வீட்டுக் கட்டடக் கலையின் உருவாக்கமும் மறுவுருவாக்கமும்' என்னும் தலைப்பில் கருத்துரை நிகழ்த்துவார். (202)

## முப்பத்தோராம் நாள் நினைவும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு
05 . 05 . 1930



உதிர்வு
25 . 03 . 2008

### அமரர் கந்தையா இராசா

வல்வெட்டியில் பிறந்து முகமாலை, எழுதுமட்டுவாழில் மணம் முடித்து வாழ்ந்தவரும் வடுவாவத்தை, புலோலி தெற்கில் வசித்து வந்தவருமாகிய எமது குடும்பத் தலைவர் கந்தையா இராசா அவர்கள் (25.03.2008) அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் நினைவுகளை நெஞ்சில் இருத்திப் பிரார்த்தனை செய்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.04.2008) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் புற்றளைப் பிள்ளையார் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் சபிண்டீகரணக் கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் முற்பகல் 10 மணியளவில் இடம்பெறும். அந்நிகழ்வில் பங்கு பற்றி மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


தற்காலிக முகவரி:
வடுவாவத்தை,
புலோலி தெற்கு,
புலோலி.

நிரந்தர முகவரி:
முகமாலை,
எழுதுமட்டுவாழ்.

குடும்பத்தினர்.

(73466)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பூவுலகு
12. 06. 1965

விண்ணுலகு
06. 05. 2007

இதயத்துள் வாழும் எங்கள்
குல விளக்கே!
ஐயப்பன் வாசலில் காலன்
உனைக் கவர்ந்து
ஆண்டு ஒன்று ஓடி
மறைந்தாலும்
மறவோம் ரஞ்சா!
உன்னை
நாம் இருக்கும் வரை.

அரசடி சனசமூக நிலையம்
வடலியடைப்பு.

## அமரர் மணியசேகரம் விக்னேஸ்வரன் (ரஞ்சன்)

(முன்னாள் தலைவர், அரசடி சனசமூக நிலையம்)

(73468)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாச் சிறப்பு மலர்

# ஆசிரியர் திரு.ஐயாத்துரை கமலநாதன்

### கல்விப் பணிமூலம் சிறந்த சமுதாயத்தை உருவாக்கியவர்



ஆசிரியர் திரு. ஐ.கமலநாதன் அவர்கள் கடந்த மூன்று தசாப்த காலத்திற்கு மேலாக கல்விப் பணியாற்றி வருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட போதிலும் யாழ். குடாநாடு முழுவதும் தனது கல்விப் பணியின் மூலமாக சிறந்த கல்விச் சமுதாயத்தை உருவாக்கியவர்.

இவருடைய மாணவர்கள் உயர் பதவிகளை வகித்து வருகின்றமை இவருடைய ஆசிரியர் பணிக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். ''செய்யும் தொழிலே தெய்வம் அதன் திறமைதான் நமது செல்வம்'' என்பதற்கு இணங்க நீண்டகால கல்விப் பணியினை செவ்வனே ஆற்றி வந்த ஆசிரியர் அவர்களின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

நல்லை ஆதீன முதல்வர்

### மாணவரின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்தவர்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு.ஐ.கமலநாதன் அவர்கள் மணிவிழாக் காண்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆசிரியத்துவத்தின் வெளிப்பாடாக வாழ்ந்தவர் கமலநாதன். ஏழைக்கு எழுத்தறிவித்தவன் கோடி தருமம் என்பதற்கமைய தென்மராட்சி பகுதியில் உள்ள மாணவர்களை மேலான நிலைக்கு கொண்டு வந்த தருமவான் ஆவார். ஒரு பாடத்தில் மாத்திரம் அல்லாது கலைத்துறை சார்ந்த அனைத்து பாடங்களிலும் புலமையுடையவராக காணப்படுகின்றமை அவருடைய, தேடல், ஆற்றல், ஆளுமைத் தன்மையை வெளிக்காட்டுகின்றது.

தன்னுடைய வளர்ச்சியைக் கருதாது மாணவரின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து முழுமையாக சேவையாற்றிய நல்லாசான் என மாணவர்களாலும், சமூகத்தாலும் முத்திரை பதித்துக் கொண்டவர். ஓய்வுக் காலத்திலும் மேலும் சிறப்புற வாழ வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

திருமதி அ.வேதநாயகம்,
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

### வாழ்த்துவதால் பெருமையடைகின்றேன்



அகவை அறுபதை நிறைவு செய்து மணிவிழாக்காணும் திரு ஐ.கமலநாதன் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன். வாழ்த்துவ தால் பெருமையடைகிறேன். தனக்கென ஒருகொள்கை, தனக் கென ஒரு பாதை எனத் தனித்துவ மான வழியில் ஆற்றுநீர் போல அமைதியான முறையில் தனது வாழ்க் கைப் பயணத்தைத் தொடரும் மனிதர் இவர். பார்ப்பதற்கு எளிமை, பழகுவதற்கு எளிமை, அவரது வாழ்க்கை முறையே எளிமைதான். எந் நிலை எய்தினும் தன்னிலை வழுவாத பண்பாளன்.

ஆசிரியன் என்ற வகையில் பல்துறை புலமைவாய்ந்தவர். ஓர் ஆசிரியன் மனம் வைத்தால் எப்பாடத்தையும் எளிமையான முறையில் சிறப்பான வகையில் மாணவர்களுக்குப் புரிய வைக்க முடியும் என்பதைச் சொல்லாலன்றிச் செயலால் சாதித்துக் காட்டியவர். எப்போதும் மாணவர் பக்கம் நின்று சிந்திப்பவர். மாணவர்களுக்கு நல்ல ஆலோசகர். நல்ல தொரு தந்தை. எந்தவொரு மாணவர்க் கும் நம்பிக்கையை ஏற்படுத்துவதன் மூலம் சாதனையைப் படைக்க முடியும் என்பதைச் சாதித்துக் காட்டியவர். தான் செய்யும் உதவிகளை மற்றவர்க்கு சொல்வதில் மட்டும் தயக்கம் காட்டுபவர். இவரது ஓய்வுக் காலம் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

திரு.க.அருந்தவபாலன்,
அதிபர், யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி



## ஆசிரியர் திரு. ஐ.கமலநாதன்
### அவர்களின் சேவை விவரம்

*பிறப்பு : 24.04.1948*
*தந்தை : கந்தையா ஐயாத்துரை*
*தாய் : ஐயாத்துரை அன்னம்மா*
*பிறந்த இடம் : மட்டுவில் தெற்கு*
*ஆரம்பப் பாடசாலை : கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை*
*இடைநிலை/ சிரேஷ்டம் : யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்*
*பல்கலைக்கழகம் : கொழும்பு பல்கலை.*
1) B.A. (Hons) *புவியியல்* 2) B.Pill.

*சேவை விவரம்*

*1) குருநாகல் அர்.இல். பான் மகா வித்தியாலயம், குருநாகல் 15.06.1977 - 15.01.1985*
*2) யா/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி 16.01.1985 - 12.02.1985*
*3) யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் 13.02.1985 - 30.06.1992*
*4) யா/இந்துக் கல்லூரி 01.07.1992 - 23.04.2008*

### போற்றுதற்குரிய கல்வியாளன்



மணிவிழாக் காணும் மதிப்பிற்குரிய ஆசிரியர் கமலநாதன் அவர்கள் செய்யும் தொழிலே தெய்வமாக கருதி 31 ஆண்டுகள் ஆசிரியப் பணியை ஆற்றி மாணவர்களின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அயராது உழைத்தவர்.

கல்வியை தொடர முடியாத மாணவர்களுக்கு அன்புக்கரம் நீட்டி தனது பணியின் மூலமாக அவர்களை உயர்த்தியவர். எழுத்தறிவித்தவன் இறைவன் என நோக்குகின்ற ஒரு மாணவ சமுதாயத்தை பார்க்கின்ற போது கல்வியாசிரியர் கல்விச் சமூகத்தின் கலங்கரை விளக்காக காணப்பட்டிருக்கின்றார். ஆசிரியரின் பணி மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

வண. T.H.வசந்தகுமார்,
தென்னிந்திய திருச்சபை, சாவகச்சேரி.

### தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி



அறுபதாம் அகவையைப் பூர்த்தி செய்யும் ஆசிரியர் திரு.ஐ. கமலநாதன் அவர்களுக்கு மணிவிழா ஆசிச் செய்தியை வழங்கு வதில் பெருமகிழ்வடைகிறேன்.

அரிது அரிது ஆசிரீயராதல் அரிது
அதனினும் அரிது அன்பினால் வெல்லுதல்
அதனினும் அரிது அர்ப்பணிப்புடையராதல்
அதனினும் அரிது அகிலத்தை வெல்லுதல்

அகிலத்துக்கு ஒளிவீசும் ஆசிரியப் பணியில் மனநிறைவுடன் ஈடுபட்டு, மணிவிழாக் காணும் ஆசிரியர் திரு.ஐ.கமலநாதன் அவர்கள் தம் வாழ்வில் சகல வளங்களையும் பெற்றுப் பல்லாண்டுவாழ, இறையருயை வேண்டி வாழ்த்துகிறேன்.

கு. பிரேமகாந்தன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,தென்மராட்சி, சாவகச்சேரி.

### பல் திறமை படைத்த ஆசான்



திரு.ஐ.கமலநாதனை கடந்த 30வருடங்களுக்கு மேலாக நான் அறிவேன். கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்று வெளியேறிய பின்னர் தனியார் கல்வி நிறுவனமான ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் என்னுடன் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். அன்று மிகவும் துடிப்புள்ள இளைஞராக இருந்தமை இன்றும் என் மனக்கண்முன் நிற்கின்றது. அன்று புவியியல் ஆசானாகத் திகழ்ந்தவர்.

பின்னர் இந்து சமயம், இந்து நாகரிகம் போன்ற பாடங்களை பல்கலைக்கழகப் புகுமுக மாணவாகளுக்கு கற்பிப்பதில் யாழ். மாவட்டத்தில் பிரபல்யமான ஆசானாகத் திகழ்ந்தார். அவரது திறமையை அவதானித்த யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் தனது பாடசாலைக்கு ஆசிரியராக்கினார். இது அவரது திறமைக்குக் கிடைத்த பரிசு.

பல்திறமைபடைத்த திரு.கமலநாதனின் மணிவிழா சிறப்புற வாழ்த்துவதோடு ஓய்வுகாலத்தில் எல்லா நலனும் பெற்று குடும்பத்துடன் சிறப்புடன் வாழ என் ஆசிகள்.

நா. சத்தியநாதன்,
கோட்டக் கல்வி அலுவலர், சாவகச்சேரி.

### சாதனைகள் சாத்தியமானவை என்பதை நடைமுறை வாழ்வில் சாதித்துக் காட்டியவர்



இன்றைய மணிவிழா நாயகன் மதிப்பிற்குரிய பேராசான் கமலநாதன் அவர்கள் காலத்தில் தேவைகளையும் கட்டாயத்தினையும் கருத்தில் கொண்ட ஒருவராக தன்னிடம் கல்விப் பசி தீர்க்க வந்த மாணவர்களிற்கு அவர்களின் தேவை உணர்ந்து தீனி போட்ட ஒருவராக செயற்பட்டார். சாதனைகள் என்பது சாத்தியமானது என்பதை நடைமுறை வாழ்வில் சாதித்துக் காட்டியவர். தமிழர் தம் பண்பாட்டில் நீண்ட காலம் நிலைத்து நின்ற ''குரு சிஷ்ய'' பரம்பரையின் தோன்றலை மீண்டும் ஒரு முறை மெய்ப்பித்துக் காட்டியவர். இதன் வெளிப்பாட்டு வடிவமாகவே இன்றைய பெருவிழாவினை நான் பார்க்கின்றேன். இத்தகைய சாதனையாளருக்கு சான்று பகரும் வகையில் நன்றியுணர்வோடு இவரது நல் மாணவர்களால் எடுக்கும் மணிவிழா சிறக்க அவர் நாமம் நிலைக்க நல் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வுறுகின்றேன்.

க.வாமதேவன்,
கிராம அலுவலர்,
மட்டுவில் மத்தி J/312

### தென்மராட்சிப் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணக் குடாநாட்டின் சிகரமாய் விளங்கும் தென்மராட்சிப் பிரதேசம் கிராமிய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிப் போக்கில் முக்கிய பங்கினை ஆற்றி வருகின்றது. கல்வி வளர்ச்சியை பொறுத்த வரையில் தென்மராட்சி பிரதேசத்தின் இவ்வளர்ச்சிக்கு இரு தசாப்தங்களுக்கு மேலாகப் பணியாற்றிய ஆசிரியர் திரு.ஐ.கமலநாதன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

ஆசிரியர் ஐ.கமலநாதன் அவர்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் வீட்டுக்கு வீடு பட்டதாரி என்று சொல்லுமளவிற்கு புதிய கல்வி சமூகம் ஒன்றை உருவாக்கியவர். இதற்கு ஆதாரமாக அவரிடம் கற்ற பல மாணவர்கள் பல்பேறு துறையிலும் பிரகாசிப்பதனை காண முடிகின்றது. செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கமைய உயர் பதவிகள் எதனையும் விரும்பாத ஆசிரியர் அவர்கள் கடந்த 30 வருடங்களாக ஆசிரியராகவே இருந்து 24.04.2008 அன்று ஓய்வு பெறுகிறார். இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

செல்லமுத்து ஸ்ரீனிவாசன்,
பிரதேச செயலர், தென்மராட்சி, சாவகச்சேரி.

### மாணவரின் மனங்கவர்ந்த ஆசான்



கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேல் கல்விப் பணியாற்றி மணிவிழாக் காணும் ஆசிரியர் திரு.ஐ. கமலநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடை கின்றேன்.

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு தமிழ், இந்து நாகரிகம், இந்து சமயம், புவியியல், பொருளியல், அரசியல்ஆகிய பாடங்களைக் கற்பித்து அவர்கள் பல்கலைக்கழகம்சென்று பட்டப்படிப்பினைப் பெறுவதற்கு வழி கோலி பல்வேறு பதவிகளில் இவர்களை அலங்கரிக்கச் செய்தவர் விழா நாயகராவார்.

அவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் சமூக சேவையிலும், கல்விச் சேவையிலும் ஓய்வுபெறமாட்டார் என்று நம்புகின்றேன். அவரது குடும்பத்தாருக்கும், அவருக்கும் மணி விழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.கயிலாயபிள்ளை
அதிபர்,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதல்வரின் வாழ்த்துரை



ஆசிரியர் ஐ.கமலநாதன் எமது கல்லூரியின் முதன்மையாசிரியரில் ஒருவராவார். இவரை எனக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் நன்கு தெரியும். ஒரு வகையில் இவர் எனக்கு உறவினரும் ஆவார். இவர் எதிர்வரும் 24.04.2008 அன்று தனது 60வயதைப் பூர்த்தி செய்வதுடன் எமது கல்லூரியின் ஆசிரிய பணியில் இருந்தும் ஓய்வு பெறுகிறார்.

ஆசிரியர் ஐ. கமலநாதன் கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன் எமது கல்லூரியில் சிறப்புற பணியாற்றியவர். ஓர் ஆசிரியன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாய் வாழ்ந்துகாட்டியவர். அவரது ஆசிரியப் பணியால் உருவான மாணவ சமுதாயத்தினர் பலர்.

எமது கல்லூரியின் க.பொ.த (உ/த)கலைத்துவ பாடத்தை சிறப்புற வழிநடத்தி அதன் சிறந்த பெறு பேறுகளுக்கு காரணமாக இருந்தவர்.

கற்றல் கற்பித்தலால் தனது பல் பரிமாண ஆளுமையை பறைசாற்றி நிற்கின்றார். அவரது ஓய்வுகாலம் சிறப்புற அமைய என் சார்பிலும் கல்லூரியின் சார்பிலும் சிவஞான வைரவப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

வி.கணேசராஜா,
அதிபர், யாழ் இந்துக்கல்லூரி.

# ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து தமிழக சட்டசபையில் நேற்று பா.ம.க. - காங்கிரஸ் உறுப்பினர்கள் கடும் வாதப் பிரதிவாதம்

சென்னை, ஏப்ரல் 24

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாகத் தமிழக சட்டசபையில் நேற்று காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும், பா.ம.க. உறுப்பினர்களுக்கும் இடையே கடும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டன. இரு தரப்பினரும் காரசாரமாகப் பேசியமையால், சட்ட சபையில் சிறிது நேரம் கூச்சல், குழப்பம் ஏற்பட்டன.

சட்டமன்றத்தில் நேற்று இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண மத்திய அரசை வலியுறுத்த வேண்டி சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

**பா.ம.க. தலைவர் பேச்சு**

தீர்மானத்தின் மீது பா.ம.க. தலைவர் ஜி.கே. மணி பேசியவை வருமாறு:-

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தமிழர்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர். இலங்கையில் அப்பட்டமாக மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன என்று உலக நாடுகளும் குறிப்பிட்டுள்ளன.

எனவே, அங்கு அமைதி வழியில் தீர்வு காணவேண்டும். இதே கருத்தை பிரதமரும் வலியுறுத்தியிருக்கிறார். மத்திய பாதுகாப்பு அமைச்சகமும், இதே கருத்தைத் தெரிவித்துள்ளது. முதலமைச்சரும் இத்தகைய கருத்தையே கொண்டுள்ளார் என்று தெரிவித்த ஜி.கே. மணி, தொடர்ந்து மத்திய அரசைக் குற்றம் சாட்டி சில கருத்துகளைக் கூறிப் பேசிக்கொண்டிருந்த போது, காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக எழுந்து நின்று அவருக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

**ஜி.கே.மணிக்கு எதிராக காங்கிரஸார் குரல்**

ஜி.கே.மணியின் கருத்துகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.

அப்போது சபாநாயகர் வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் அமருங்கள் என்று காங்கிரஸ் உறுப்பினர்களைப் பார்த்துத் தெரிவித்தார். ஆனால், முன் வரிசையில் இருந்த காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் டி.சுதர்சனம், துணைத் தலைவர் யசோதா, கொறடா பீட்டர் அல்போன்ஸ் உள்ளிட்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் தொடர்ந்து எழுந்து நின்றுகொண்டே தங்களுக்குப் பேச வாய்ப்பளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

ஜி.கே.மணி பேசிய கருத்துகளில் ஆட்சேபகரமான கருத்துகள் இருந்தால், அந்தக் கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்றும், காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் அமரவேண்டும் என்றும் சபாநாயகர் கேட்டுக் கொண்டார். உடனே காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் இருக்கைகளில் அமர்ந்தனர். ஆனால், ஞானசேகரன் எழுந்து, நாங்கள் அமர்கிறோம். நீங்கள் பதில் அளியுங்கள் என்று சுதர்சனத்திடம் பேசுமாறு வலியுறுத்தினார். இதையடுத்து சபாநாயகரும், சுதர்சனத்தை பேசுமாறு அழைத்தார்.

**''பிரபாகரனைக் கைது செய்''**

அப்போது, பா.ம.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து, காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு எதிராகக் குரல் எழுப்பினார்கள். இருதரப்பினரும் ஒருவரைப்பார்த்து ஒருவர் கைகளை நீட்டியபடி ஏதோ ஆவேசமாகப் பேசிக்கொண்டனர். அப்போது காங்கிரஸ் தரப்பிலிருந்து 'கைது செய் கைதுசெய் பிரபாகரனைக் கைது செய்' - என்று கோஷம் எழுப்பப்பட்டது. இதனால் அவையில் சிறிது நேரம் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. உடனே ஜி.கே.மணி தனது இருக்கையில் அமர்ந்துவிட்டார். இதனையடுத்து காங்கிரஸ் சுதர்சனம் பேசத் தொடங்கினார்.

அப்போது பா.ம.க. சட்டமன்றத் துணைத் தலைவர் ஆறுமுகம் எழுந்து, ஜி.கே.மணி பேசி முடித்தபிறகு சுதர்சனம் பேசட்டும் என்று கூறி, மணியைப் பேசுமாறு கூறினார். அவருக்கு ஆதரவாக மற்றைய பா.ம.க. உறுப்பினர்களும் குரல் எழுப்பினர். இதனால் மீண்டும் அவையில் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

**ஜி.கே.மணியின் கருத்துகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்கக் கோரிக்கை**

அனைவரையும் அமைதியாக இருக்கு மாறு சபாநாயகர் உத்தரவிட்டார். அதன் பின்னர் சுதர்சனம் பேசியபோது, ''இங்கு மத்திய அரசைக் குறைகூறி ஜி.கே.மணி பேசிய கருத்துகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்றும், இந்தப் பிரச்சினை குறித்து மத்திய அமைச்சராக உள்ள அன்புமணி நாடாளுமன்றத்தில் பேசட்டும்; இங்கு பேசுவது முறையல்ல' என்றும் தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்த ஜி.கே.மணி, ''மத்திய அரசை குற்றம் சாட்டும் வகையில் எதையும் நான் பேசவில்லை. தமிழர்களின் உணர்வுகளை வலியுறுத்தும் வகையில்தான் நான் இங்கு பேசினேன்'' - என்றார்.

இதுதொடர்பாக கடந்த 3 நாட்களுக்கு முன் காங்கிரஸ் தலைவர் சோனியாவையும், பிரதமரையும் சந்தித்து டாக்டர் ராமதாஸ் இலங்கையில் அமைதி ஏற்பட, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார் என்றும் ஜி.கே.மணி கூறினார். பிரதமரும் கூட ஒன்றுபட்ட இலங்கை என்ற வரம்புக்குள் அமைதி வழித் தீர்வு காணவேண்டும் என்று தெரிவித்துள்ளார். அதையேதான் நாங்கள் வலியுறுத்துகிறோம் என்றும் ஜி.கே.மணி தெரிவித்தார்.

**குறுக்கிட்ட முதல்வர்**

அப்போது இடைமறித்த முதலமைச்சர் கருணாநிதி, ஒன்றுபட்ட இலங்கை என்ற பிரதமரின் கருத்தை ஜி.கே.மணி ஏற்றுக் கொள்கிறாரா என்று கேட்டார். இதற்குப் பதில் அளித்த ஜி.கே.மணி, ''1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தின்படி ஒன்றுபட்ட இலங்கை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்'' - என்று கூறினார்.

**கிழக்கு மாகாண தேர்தலுக்கு எதிர்ப்பு**

''அந்த ஒப்பந்தத்தை மீறி தற்போது இலங்கையில் தேர்தல் நடத்தக் கூடாது. இதனை இலங்கையிடம் இந்திய அரசு வலியுறுத்த வேண்டும். அனைத்துத் தரப்பினரும் ஏற்கும் வகையில் ஒரு நல்ல தீர்வைக் காண இந்திய எடுக்கும் நடவடிக்கைகளுக்கு விடுதலைப் புலிகளும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றுதான்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொப்புள் கொடி உறவு என்றால் மட்டும் போதாது; அதனைக் காப்பாற்ற வேண்டியதும் அவசியம்

## சட்டசபையில் முதலமைச்சர் கருணாநிதி பேச்சு



சென்னை,ஏப்.24

தொப்புள் கொடி உறவு என்று சொன்னால் மட்டும் போதாது. அந்த உறவுகளை நாம் காப்பாற்றவேண்டும். அதேவேளை, இலங்கை விடயத்தில் மத்திய அரசைக் குறை கூறிப் பயனில்லை. அவர்களைப் பழிசொல்லியும் பயனில்லை.

சட்டசபையில் நேற்று இலங்கை விடயம் தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில் முதலமைச்சர் மு.கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது உரையில் கூறியதாவது-

இலங்கைப் பிரச்சினை தொடங்கிய காலம் முதல் செல்வா உள்ளிட்ட தலைவர்கள் பலரும் அறவழிப்போராட்டங்கள், கிளர்ச்சிகள் நடத்தினார்கள். அது பயனளிக்காத நிலையில் இலங்கை ஆதிக்கத் தின் கொடுமையில் இருந்து விடுதலை பெற்றே ஆகவேண்டும் என்று சிலர் போராளிகளாக மாறினார்கள்.

அவர்கள் அனைவரும் ஒரே குழுவாக ஒற்றுமையுடன் இருந்து போராட்டம் நடத்தி இருந்தால் இப்போது நேபாளத்தில் கிடைத்திருப்பது போல ஒரு வெற்றியை அவர்கள் ஈட்டியிருக்க முடியும். ஆனால் அங்குள்ள போராளி குழுக்களுக்குள்ளே நடந்த போராட்டம் தான் இன்று இந்த அவையிலே அவர்களுக்காக பரிந்துரை செய்து பேசும் நிலைமை உருவாகி உள்ளது. அப்போதே கூட நான் சகோதர யுத்தத்தை நிறுத்துங்கள் என்று சொல்லியிருக்கிறேன்.

**தாங்கிப்பிடிக்கும் தாய் உள்ளம்**

ஒரே குழுவாக இருந்து தமிழர்களுக்குரிய உரிமைகளை பெறும் எண்ணம் அவர்களிடம் இல்லாமல் ஒரு குழு மற்ற குழுவினரை மாய்க்க வேண்டும் என்று வெட்டிக் கொண்டும், சுடப்பட்டும் மாய்ந்தார்கள். அமிர்தலிங்கம் போன்ற தலைவர் கொல்லப்பட வேண்டியவரா? விருந்துக்கு என்று வந்து அவரையும் அவரது தோழர்களையும் பிணமாக சாய்த்தார்கள். அதனால் தான் உலகில் பல விடுதலைப் போராட்டங்கள் வெற்றி பெற்றும் கூட இவர்களால் வெற்றி பெற முடியவில்லை. நமக்குள்ளே ஒற்றுமையின்றி பகைவருக்கு இடம் கொடுத்துவிட்டதால் தான் சிங்கள இராணுவம் நம்மீது ஏறி மிதிக்கிறது. ஆனாலும் கூட நம் குழந்தை தவறி விழும் போது தாங்கி பிடிக்கும் தாய் உள்ளத்துடன் நாம் செயல்படுகிறோம்.

தொப்புள் கொடி உறவு என்று சொன்னால் மட்டும் போதாது. அந்த உறவுகளை நாம் காப்பாற்ற வேண்டும். அதற்காக இங்கே ஒரு தீர்மானம் வருவதை நானும் ஆதரிக்கிறேன். அதே நேரத்தில் இந்திய அரசை குறைகூறி பயன் இல்லை. அவர்கள் பெரும் இழப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள். எனவே அவர்களை பழி சொல்லியும், குறை கூறியும் பயன் இல்லை.

அந்தக் குடும்பம் இன்னும் மனித நேயத்துடன் தான் இருக்கிறது என்பதற்கு வேலூர் சிறைச்சாலை சம்பவமும், சோனியா மன்னிப்பு அளித்ததும் உதாரணங்களாகும். அதன் அடிப்படையில் அவர்கள் தமிழர்களின் உயிருக்கு பாதுகாப்பாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன். நீங்கள் இதை ஆதரித்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். - என்றார் கருணாநிதி.(அ)

# முஸ்லிம் காங்கிரஸின் தாருஸ்ஸலாம் தலைமையகம் திடீர் சோதனை!

## முழுக் கட்டடமும் மீதி விடாது சல்லடை!!

கொழும்பு,ஏப்.24

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொம்பனித் தெருவில் அமைந்துள்ள தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்றுப்பகல் 12.20 மணி அளவில் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் எனக் கூறிக்கொண்டு சிவில் உடையில் வந்த ஆறுபேர் கொண்ட குழு முழுக் கட்டடத்தையும் ஓர் இடமும் விடாமல் சோதனை நடத்தியுள்ளது.

இவர்கள் சோதனை செய்யும் வேளையில் தலைமைக் காரியாலயமான தாருஸ்ஸலாமில் கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத், மத்தியகுழு உறுப்பினரும், செயற்குழுச் செயலாளருமான நயீமுல்லா மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய பிரமுகர்கள் இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதற்காக இந்தச் சோதனை மேற்கொள்ளப்படுகிறது என உரிய அதிகாரிகளிடம் கேட்டபோது அநாமதேயத் தொலைபேசி அழைப்பொன்று தமக்குக் கிடைத்ததாகவும் அதனாலேயே சோதனை செய்ய வந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

எனினும் குறித்த அதிகாரிகள் தாங்கள் குறித்த கட்சி அலுவலகத்தை சோதனை மேற்கொள்ளப் போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையிடம் எவ்வித அறிவித்தலையும் செய்யவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

சோதனை மேற்கொள்ளப்பட்ட சமயம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை அலுவலகத்தினுள் ஒருவித பதற்றம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# வவுனியாவில் தாதிமார் இன்று பணிப் பகிஷ்கரிப்பு

வவுனியா ஆதார வைத்தியசாலையில் நிலவும் தாதிமார் பற்றாக் குறையை நீக்கக் கோரி அங்குள்ள தாதிமார் இன்று இரண்டு மணி நேரப் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் 170 தாதிமார் தேவைப்படுகின்றனர். ஆனால், 83 பேர் மட்டுமே சேவை யில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 15 பேர் பின்படிப்பு ஆரம்ப தாதியர் பயிற்சிக்கு தெரிவாகியுள்ளனர். அத்துடன், மேலும் 8 பேர் பிரசவ விடுமுறையில் உள்ளனர். தற்போது 60 பேர் மட்டுமே சேவையில் உள்ளனர்.

# ஷெல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், நேற்றுப் பிற்பகல்வரை தென்மராட்சிப் பிரதேச எல்லைப் பகுதிகளில் தொடர்ந்தும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தவண்ணமிருந்தன. இதனால் பிரதேசமக்கள் பெரும் பதற்றத்துடன் காணப்பட்டனர்.

குறிப்பிட்ட சில பிரதேச பாடசாலைகள் நேற்று ஆரம்பமாகி சில மணி நேரத்துடனேயே மூடப்பட்டன. பல பாடசாலைகளில் மாணவர் வரவு மிகக் குறைவாகக் காணப்பட்டது. பிரதேச மக்களின் இயல்பு வாழ்வும் நேற்றுப் பாதிப்படைந்திருந்தது.

# படையினர்-புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டல் வரையான 7 கிலோமீற்றர் நீள்மான முன்னரண் பகுதியிலிருந்து நேற்று அதிகாலை 2.30 மணிக்குப் படையினர் பாரிய முன்நகர்வை மேற்கொண்டனர்.

பல்குழல் பீரங்கிகள், ஆட்லறிகள், மோட்டார்கள் என்பனவற்றைப் படையினர் பெருமளவில் பயன்படுத்திக் கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துளனர்.

இராணுவத்தின் 53ஆம் படைப் பிரிவின் கொமாண்டோப் படையணியும் 55 ஆம் டிவிஷனைச் சேர்ந்த படையினரும் இணைந்து இந்த முன்நகர்வை மேற்கொண்டனர் என்றும் இந்தப் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு எதிராகத் தாம் தீவிர தாக்குதலை நடத்தியதாகவும் விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

கடுமையான தாக்குதலைத் தொடர்ந்து படையினர் தமது நிலைகளுக்குத் திரும்பியுள்ளனர் என்றும் - புலிகளினால் படையினரின் சடலங்களும் பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

N.C.A கல்விநிலையம்
கே.கே.எஸ் றோட், இணுவில்
O/L DAY CLASS
புதிய பிரிவு
ஆரம்பம்:-25.04.2008
வெள்ளி 7.00மணி
கடந்தகால பெறுபேறே எமது நிறுவன வளர்ச்சியின் எடுத்துக் காட்டு
இம்மாதக் கட்டணம் இலவசம்.

**புதிய தாக்குதல் முறியடிக்கப்பட்டது**

இதேவேளை, கிளாலி மற்றும் முகமாலையிலுள்ள படையினரின் நிலைகளை நோக்கி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட புதிய தாக்குதலை முறியடித்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் மீது இராணுவத்தினர் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டதைத் தொடர்ந்து நேற்று அதிகாலை 2.30 மணியளவில் கடும் மோதல் மூண்டதாக அவை தெரிவித்துள்ளன.

இந்த மோதலின் போது விடுதலைப் புலிகளுக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டதாகவும், அவர்கள் தமது முன்னைய நிலைகளிலிருந்து 500 மீற்றர் பின்வாங்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்றும் இதனைப் பயன்படுத்திய இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் முதல் தொகுதி நிலைகளைக் கைப்பற்றியதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் எமது நிலைகள் மீது தாக்குதலை மேற்கொண்டனர். நாங்கள் திருப்பித் தாக்கி அவர்களின் 500 மீற்றர் பகுதியைக் கைப்பற்றியுள்ளோம் என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ)

# இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடை பெற்றபோது பாட்டாளி மக்கள் கட்சி உறுப் பினர்களுக்கும் காங்கிரஸ் கட்சி உறுப்பி னர்களுக்கும் இடையில் கடும் வாதப்பிரதி வாதங்கள் நடைபெற்றன. அதனால் சபை யில் சிறிது நேரம் கூச்சல் குழப்பம் ஏற்பட் டன.

பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றத் தலைவர் ஜி.கே.மணி மத்திய அரசைக் கண்டித்துப் பேசிய சில பகுதிகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டன.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மீறி இலங்கையின் வடக்கு-கிழக்கைப் பிரித்து அங்கு தேர்தல் நடத்தப்படுகிறது. அந்த தேர்தலை நடத்தக்கூடாது என்று இந்திய மத்திய அரசு இலங்கை அரசிடம் வலியுறுத்தவேண்டும் - என்று ஜி.கே.மணி தமது பேச்சில் தெரிவித்தார். (அ)

# புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது:-

இந்த மோதல்களில் 52 இற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர். எமது தரப்பில் 38 படையினர் கொல்லப்பட்டிருக்கின்றனர். 84 பேர் காயமடைந்திருக்கின்றனர்.

**விமானத் தாக்குதல்கள்**

அதேவேளை, விமானப்படையினர் புலிகளின் பீரங்கி நிலைகள் மீது குண்டு வீச்சை நடத்தினர். அத்துடன் பிற்பகல் 1.30 மணிஅளவில் அவர்கள் ஒன்று கூடுகின்ற தளம் ஒன்றின் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மீண்டும் பிற்பகல் 3.45 மணியளவில் விமானப் படையின் எம்.ஐ. 24 ரக தாக்குதல் ஹெலிகள் புலிகளின் முன்னரங்கின் இரண்டாவது நிலைகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

**சமர்களின் போது இழப்புக்கள் சகஜமானவை**

இத்தகைய சமர்களின் போது இழப்புக்கள் ஏற்படுவது சகஜம். அதனை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் - என்றார். (அ-1)

# படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இற்கும் மேற்பட்ட இராணு வத்தினர் மடிந்தனர். 400 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

இவ்வாறு நேற்றிரவு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

சிறிலங்கா இராணுவத்தினருக்கும் எமக்கும் இடையில் நேற்று நடைபெற்ற முகமாலைக் கடுஞ்சமரில் எங்கள் தரப்பில் 16 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

20 படையினரின் சடலங்கள் இன்று (புதன்கிழமை) இரவு 7 மணிவரை கிளிநொச்சிக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. கிளிநொச்சி பொது விளையாட்டுத் திடலில் வைக்கப்பட்டுள்ள சிறிலங்காப் படையினரின் உடல்களை மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் அவற்றினைப் பார்வையிடத் திரள்கின்றனர்.

படையினரின் உடல்களை நாளை (வியாழன்) அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக சிறிலங்கா அரசிடம் விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்படவுள்ளன. - என்றார். (அ)

# ஈழத்தமிழர் பிரச்சினை...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் வலியுறுத்துகிறோம்'' - என்றும் ஜி.கே.மணி தெரிவித்தார்.

அதன்பிறகு ம.தி.மு.க. சட்டமன்ற கட்சித் தலைவர் மு.கண்ணப்பன் பேசியவை வருமாறு:-

1945ஆம் ஆண்டு முதல் இலங்கையில் செய்துகொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்களை அந்த நாட்டு அரசு கிடப்பில் போட்டும் மீறியும் வந்திருக்கிறது. தற்போது கிழக்கில் சிங்களவர்களை குடியமர்த்தி தேர்தல் நடத்துவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

**சர்வதேச சட்டத்தை இலங்கை அரசு மீறிவிட்டது**

1987ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தை அந்த அரசு மீறியுள்ளது. சுயாதிபத்திய உரிமை பெற்ற இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட இந்த ஒப்பந்தம் மீறப்படக்கூடாது என்பது சர்வதேச சட்டம். ஆனால், இந்த ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு செயற்படுகிறது. இதனை இந்தியா [illegible]க்கக்கூடாது. எனவே 1987ஆம் வருடத்திய ஒப்பந்தத்தை இலங்கை முறையாக செயற்படுத்த வேண்டும். இதனை இந்தியா வலியுறுத்த வேண்டும். அதற்காக இந்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தித் தீர்மானம் கொண்டு வரவேண்டும். இலங்கையில் வாழும் தமிழர்களைப் பாதுகாக்கும் பொறுப்பும், கடமையும் தமிழக அரசுக்கும், முதலமைச்சருக்கும் உண்டு - என்றார் கண்ணப்பன்.

அதன்பிறகு பேசிய காங்கிரஸ் சுதர்சனம் கூறியவை வருமாறு:-

இலங்கையில் வாழும் தமிழர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதில் யாருக்கும் எந்த வித மாறுபட்ட கருத்தும் இல்லை. இங்கு பேசிய கண்ணப்பன், ஒப்பந்தங்கள் மீறப்பட்டமை பற்றித் தெரிவித்தார். ஆனால், 1987 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தம் மீறப்பட்டதற்கு விடுதலைப் புலிகள்தான் காரணம் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

ஒருமுறை பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பிய ராஜீவ் காந்தி, கருணாநிதியை டில்லிக்கு அழைத்துப் பேசி அவரை இலங்கைக்கே நேரடியாகச் சென்று தீர்வுகாண வேண்டும் என்று தெரிவித்தார். அதற்கு கருணாநிதியும் சம்மதம் தெரிவித்து சென்னைக்கு வந்து சேர்ந்தபோது, அவருக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அப்போது தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வைகோ, இலங்கைக்கு கள்ளத் தோணியில் சென்றுவிட்டார் என்பதே அந்த அதிர்ச்சிச் செய்தி - என்றார் சுதர்சனம்.

**ம.தி.மு.கவினர் எதிர்ப்புக் குரல்**

அப்போது ம.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று எதிர்ப்புக் குரல் எழுப்பினார்கள். இதற்கு பதில் அளிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்று கண்ணப்பன் கூறினார்.

தொடர்ந்து பேசிய சுதர்சனம், ''அப்பாவித் தமிழர்கள் என்ற பெயரில் வன்முறைக் கலாசாரம் உருவாவதை யாரும் வேடிக்கை பார்க்க முடியாது. அந்த வன்முறையில் எங்கள் தலைவர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். இதனை உலகத்தில் உள்ள தமிழர்களும், இந்தியர்களும் மறக்கவோ, மன்னிக்கவோ முடியாது. இங்கு மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றுவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், ஆட்சேபகரமான வார்த்தைகள் தீர்மானத்தில் இருந்தால் அதனை அகற்றிவிட்டு நிறைவேற்றவேண்டும் - என்றார்.

இதனையடுத்துப் பேசிய ம.தி.மு.கவின் கண்ணப்பன், ''இலங்கைத் தமிழர்களின் நிலையை நேரில் தெரிந்து வருவதற்காக வைகோ கள்ளத்தோணியில் சென்றதை நாங்கள் பெருமையாக நினைக்கின்றோம்'' என்று கூறி மத்திய அரசைக் குற்றம் சாட்டும் வகையில் ஒரு சில கருத்துகளை தெரிவித்தார். அந்தக் கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டன. இதன் பின்னர் இந்தப் பிரச்சினை குறித்து முதல்வர் அளித்த விளக்கத்தைத் தொடர்ந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ-சி)

CHEMISTRY
A/L 2010
BASIC
ஆரம்பம்:-25.04.2008
Fri 4.30 p.m.
S.Vasu
NAVALAR
JAFFNA

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org